# வானவில்

# VAANAVIL

இதழ் - 77
வைகாசி 2017

ISSUE – 77
MAY 2017


# ‘நல்லாட்சி’ அரசு இராணுவ அரசாக உருமாறப் போகிறதா?



இரண்டரை ஆண்டுகளுக்கு முன்னர் “நல்லாட்சி” என்று சொல்லிக்கொண்டு ஆட்சிக்கு வந்த இன்றைய மைத்திரி – ரணில் அரசாங்கம், தேர்தல் காலத்தில் மக்களுக்குக் கொடுத்த வாக்குறுதிகளை நிறைவேற்ற முடியாமலும், நாட்டில் பூதாகரமாக எழுந்துள்ள பிரச்சினைகளைத் தீர்க்க முடியாமலும் தத்தளிக்கின்ற சூழ்நிலையில், ஆட்சியைத் தக்க வைத்துக் கொள்வதற்காக இராணுவ ஆட்சியை நோக்கிச் செல்கின்றதா என்ற சந்தேகம் மக்கள் மத்தியில் ஏற்பட்டுள்ளது.

இந்த அரசாங்கம் பதவிக்கு வந்தால் தமது பிரச்சினைகள் எல்லாம் தீர்ந்துவிடும் எனக் கூடுதலாக எதிர்பார்த்தவர்கள் நாட்டின் சிறுபான்மை இனங்களைச் சேரந்த மக்களே. அதிலும் குறிப்பாக வடக்கு கிழக்கில் வாழும் தமிழ் மக்கள் இந்த அரசாங்கத்தின் மீது அளவுக்கு அதிகமான நம்பிக்கை வைத்தனர். அதற்குக் காரணம் கடந்த ஜனாதிபதித் தேர்தலிலும், பொதுத் தேர்தலிலும் எந்தவிதமான நிபந்தனையும் இன்றி மைத்திரி – ரணில் கூட்டை ஆதரித்த தமிழ் தேசியக் கூட்டமைப்பு, “நல்லாட்சி”யின் மூலம் தமிழ் மக்களின் அத்தனை பிரச்சினைகளும் தீர்க்கப்பட்டுவிடும் எனக் கொடுத்த அபரிமிதமான நம்பிக்கைதான்.

60 ஆண்டுகளுக்கும் மேலாக தீர்க்கப்படாது இருக்கும் இனப் பிரச்சினை நல்லாட்சியின் முதலாவது ஆண்டிலேயே தீர்க்கப்பட்டுவிடும் என கூட்டமைப்புத் தலைவர்கள் தமிழ் மக்களுக்கு அடித்தும் அறுதியிட்டும் கூறினர். வடக்கும் கிழக்கும் மீண்டும் இணைக்கப்படும், இணைந்த வடக்கு கிழக்கிற்கு சமஸ்டி அடிப்படையிலான அதிகாரம் வழங்கப்படும், போர்க் குற்றவாளிகள் (முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச உட்பட) சர்வதேச நீதிமன்றத்தால் விசாரிக்கப்பட்டு தண்டிக்கப்படுவார்கள், இராணுவத்தின் வசமுள்ள தமிழ் மக்களின் காணிகள் முழுமையாக விடுவிக்கப்படும், காணாமல் போனவர்கள் கண்டறியப்படுவார்கள், விசாரணையின்றி சிறைகளில் வாடும் தமிழ் கைதிகள் விடுவிக்கப்படுவார்கள், என்றவாறான பல விதமான வாக்குறுதிகளை தமிழ் கூட்டமைப்பு மக்களுக்கு வழங்கியது.

ஆனால் அவர்கள் சொன்னதில் ஒரு வீதத்தைக்கூட நல்லாட்சி இன்றுவரை செய்யவில்லை. இனிமேலும் அரசாங்கம் அவற்றைச் செய்வதற்கான எந்த அறிகுறியும் கூடத் தென்படவில்லை.

இந்த நிலைமையில்தான், மக்கள் தமது தலைவர்களை நம்பிப் பிரயோசனம் இல்லை, எனவே தாமே வீதியில் இறங்கிப் போராடிப் பார்த்தால் என்ன என்ற தற்துணிபுடன் ஆங்காங்கே தமது கோரிக்கைகளை வலியுறுத்திப் போராட்டங்களை ஆரம்பித்தனர். இந்தப் போராட்டங்கள் சொற்ப நாளில் பிசுபிசுத்துவிடும் என அரசு மட்டுமின்றி, தமிழ் தேசியக் கூட்டமைப்பும் எதிர்பார்த்தனர். ஆனால் மக்கள் முன்வைத்த காலைப் பின்வைக்கவில்லை எனக் கண்டதும்தான் இரு பகுதியினரும் ஓடி விழித்தனர். இந்த நிலைமையை இப்படியே விட்டால் தமது அதிகாரத்துக்கு ஆபத்து வந்தவிடும் என உணர்ந்த அவர்கள், மக்களின் தன்னெழுச்சியான போராட்டங்களுக்கு கடிவாளம் போட வேண்டியதின் அவசியத்தை உணர்ந்து கொண்டனர்.

வட கிழக்கின் நிலைமை இப்படியென்றால், தென்னிலங்கை

தொடர்ச்சி 14ம் பக்கம் பார்க்க...

நூறு சிந்தனை மலரட்டும்

# இந்தியப்பிரதமரின் இரண்டாவது இலங்கை விஜயம்

2014 ஆண்டு மே மாதத்தில் தற்போதைய இந்தியப் பிரதமராகப் பதவியேற்ற நரேந்திர மோடி, கடந்த இரண்டு வருடகாலத்தில் இரண்டு தடவைகள் இலங்கைக்கு விஜயம் செய்துள்ளார். இவரது இந்த இரண்டு விஜயங்களுமே 2015 ஆண்டு ஜனவரியில் இலங்கையில் ஏற்பட்ட ஆட்சிமாற்றத்தின் பின்னரே நிகழ்ந்துள்ளன. 2015 ஆண்டு மார்ச் மாதத்தில் நரேந்திர மோடியின் இலங்கைக்கான முதலாவது உத்தியோகபூர்வ அரச விஜயம், 28 வருடங்களின் பின்னர் இந்தியப் பிரதமர் ஒருவர் (1987 ஆண்டில் இலங்கை – இந்திய ஒப்பந்தம் கைச்சாத்திடுவதற்காக அப்போதைய இந்தியப் பிரதமர் ராஜீவ்காந்தி இலங்கைக்கு உத்தியோகபூர்வ விஜயம் மேற்கொண்டிருந்தார்) மேற்கொண்ட முதலாவது விஜயமாகும். அப்போது அந்த விஜயம், இந்திய அரசின் அனுசரணையுடன் நிகழ்த்தப்பட்ட ஆட்சிமாற்றத்தினை வலுப்படுத்தும் நோக்கில் அமைந்த விஜயமாகவே பலராலும் நோக்கப்பட்டது. ஆனால் இம்மாதம் 11ந் திகதி சர்வதேச வெசாக் தினத்தில் பிரதம அதிதியாகக் கலந்து கொள்வதற்காக நரேந்திர மோடி இலங்கைக்கு மீண்டும் வருகைதந்தது பற்றிக் கொஞ்சம் ஆழமாகச் சிந்திக்க வேண்டியுள்ளது.

இலங்கை – இந்திய ஒப்பந்தம் மூலம் இலங்கையில் கொண்டு வரப்பட்ட 13வது திருத்தச்சட்டத்தினை வடக்குக் கிழக்கில் அமுல்படுத்துவதில் தோல்வியைத்தழுவிய இந்திய அரசாங்கம், ராஜீவ்காந்தி புலிகளால் 1991 ஆண்டில் கொல்லப்பட்ட பின்னர், நீண்ட காலமாக இலங்கையின் இனப்பிரச்சனையில் அரசியல் ரீதியாக பகிரங்கமாகத் தலையிடுவதில்லை என்ற மௌன நிலைப்பாட்டினையே கடைப்பிடித்து வந்தது. ஆனால் 2009 ஆண்டில் இலங்கையில் உள்நாட்டு யுத்தம் முடிவுக்குக் கொண்டுவரப்பட்ட பின்னர், இனப்பிரச்சனைக்கான அரசியல் தீர்வினை வலியுறுத்துவதிலும், யுத்தத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவிசெய்வதிலும், போர்க்குற்ற விசாரணையிலும் இந்தியா அக்கறைகாட்டத் தொடங்கியது.

அத்துடன் தமிழ்நாட்டைச் சேர்ந்த மீனவர்கள் இலங்கை கடற்பரப்பினுள் மீன்பிடிப்பதும், அவர்களை இலங்கை கடற்படை தாக்குவதும் கைதுசெய்வதும் என்றொரு பிரச்சனையும் இலங்கைக்கும் இந்தியாவிற்குமிடையில் நீண்டகாலமாகவே இருந்து வந்தது. அதுவும் பூதாகரமான ஒரு பிரச்சனையாக உருவெடுக்கத் தொடங்கியது. இந்தப் பிரச்சனை அனைத்து இந்தியக்குடிமக்களை நேரடியாகப் பாதிக்காவிடினும், இந்தியாவின் மிகமுக்கிய மாநிலங்களில் ஒன்றான தமிழ்நாட்டு மீனவரது பிரச்சனை. இலங்கையில் தமிழ் மக்கள் ஒடுக்குமுறைக்கு உள்ளாக்கப்படுகிறார்கள், தமிழ்நாட்டு மீனவர்கள் பாதிக்கப்படுகிறார்கள் என்பதானது இலங்கை அரசு என்பதே ஒட்டுமொத்த தமிழ் விரோத அரசாக சித்தரிக்கப்பட்டதனால், இந்தியா தமிழர் தரப்பில் ஆஜராக வேண்டிய பாரம்பரிய நிலைப்பாட்டிற்குத் தள்ளப்படுவதாக மீண்டும் தன்னை உருவகப்படுத்தியது. இதனால் மோடியின் இலங்கைக்கான முதலாவது விஜயம் பெரும் எதிர்பார்ப்பினைத் தோற்றுவித்தது.

இதைவிட, மகிந்த ராஜபக்ச தலைமையிலான இலங்கை அரசு போர் முடிவுற்ற பின்னர், சீனாவின் நீர்மூழ்கிக்கப்பலுக்கு இலங்கையில் தரித்துச்செல்ல அனுமதி வழங்கியதால், இலங்கை அரசினை சீனசார்பு அரசெனக் கருதிய இந்திய அரசு, 2015 ஆண்டில் இலங்கையில் ஆட்சிமாற்றம் ஒன்றை ஏற்படுத்துவதில் பின்னின்று செயற்பட்டு, வெற்றியும் கண்டது. இதனால் இந்திய சார்பு இலங்கை அரசினை வைத்து சகலதையும் செய்யலாம் (இனப்பிரச்சனை மற்றும் மீனவர் பிரச்சனைகளுக்குத் தீர்வுகள், சீன ஆதிக்கத்தினைக் குறைத்தல்) எனப் பலரும் எதிர்பார்த்தார்கள். ஆனால் சீன ஆதிக்கத்தினை பொருளாதார உதவியுடன் மட்டுப்படுத்தல் (இம்மாதம் சீன நீர்மூழ்கிக்கப்பல் ஒன்றுக்கு இலங்கையில் எரிபொருள் நிரப்பவும் அனுமதி மறுக்கப்பட்டுள்ளது) என்பதைத்தவிர, வேறொன்றும் இதுவரையில் நடக்கவில்லை. அத்துடன் இந்தியா, இலங்கையுடன் பொருளாதார ஒப்பந்தம் (Economic and Technology Co-operation Agreement - ETCA) ஒன்றினைச் செய்வதிலும் தீவிரமாக முனைப்புக்காட்டியும் வருகின்றது. ஆனால் இந்த ஒப்பந்தத்திற்கு தென்னிலங்கை அரசியலில் பாரிய எதிர்ப்புள்ளது.

இந்த நிலையில், முதலில் வடக்கிற்கு விஜயம் செய்த மோடி, இம்முறை தெற்கில் வெசாக் தினக்கொண்டாட்டத்துடனும் மலையகத்தில் வைத்தியசாலைத் திறப்புவிழாவுடனும் நிறுத்திக் கொண்டது பல வினாக்களையும் சந்தேகங்களையும் எழுப்பியுள்ளது. தமிழ்த்தேசியக் கூட்டமைப்பினருடனான மோடியின் சந்திப்பு இந்தியாவிற்கு திரும்புகையிலேயே விமான நிலையத்தில் வைத்தே நிகழ்ந்துள்ளது. ஆனால் இலங்கை பெருமபான்மையின மக்களால் இன்னமும் நேசிக்கப்படும், அதேவேளை இந்தியாவால் விரும்பப்படாதவராய்க் கருதப்படும் மகிந்த ராஜபக்சவை மோடி இரண்டாவது முறையாகச் சந்தித்தும் இருக்கிறார். இந்தச் சந்திப்பும் வெசாக் வழிபாடும் இலங்கையில் மீண்டும் ஆட்சிமாற்றம் ஏற்பட்டாலும் எதிர்கால அரசினையும் கைக்குள் வைத்துக் கொள்ளும் இந்தியாவின் தந்திரோபாயமாகவும், சிங்கள, பௌத்தர்களின் நம்பிக்கையைப் பெறும் புதிய தோற்றமாகவும் இருக்கலாம். ஆனால் மோடி அரசின் இந்தப் 'புதிய பருப்பு' இலங்கையில் வேகுமா?

## புரட்சிகர மேதின வாழ்த்துக்கள்!

"கோடிக்கால் பூதமடா
தொழிலாளி கோபத்தின் ரூபமடா!"
உலகம் முழுவதுமுள்ள உழைப்பாளி மக்களுக்கு 'வானவில்' சார்பாக புரட்சிகர மேதின வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

-ஆசிரியர் குழு

வானவில்

தொடர்பு மின்னஞ்சல் முகவரி: sunvaanavil@gmail.com

'வானவில்' இதழுக்கு ஆக்கங்களை அனுப்ப விரும்புபவர்களும், இதழ்களைப் பெறவிரும்புபவர்களும் மற்றும் அனைத்துத் தொடர்புகளுக்கும் மேலுள்ள மின்னஞ்சல் முகவரியுடன் தொடர்பு கொள்ளவும்.

இணையத்தளம்: http://manikkural.wordpress.com/ இந்த இணையத்தளத்தில் இதுவரையில் வெளிவந்த அனைத்து வானவில் இதழ்களையும் வாசிக்கலாம்.

## ஒக்ரோபர் சோசலிசப் புரட்சியின் நூற்றாண்டு நினைவாக:

# தோழர் லெனின் மறைவின் போது தோழர் ஸ்டாலின் ஆற்றிய உரை





**சோ**வியத் கம்யூனிஸ்ட் கட்சியின் ஸ்தாபகரும், 1917இல் நடைபெற்ற மகத்தான ஒக்ரோபர் சோசலிசப் புரட்சியின் தளகர்த்தரும், உலகின் முதலாவது சோசலிச நாடான சோவியத் சோசலிசக் குடியரசுகளின் ஒன்றியத்தின் முதல் தலைவருமான தோழர் லெனின் அவர்கள் 1924 ஜனவரி 21இல் காலமானார். அவர் காலமானதைத் தொடர்ந்து, சோவியத் புரட்சியில் அவரது வலதுகரமாகச் செயற்பட்ட தோழர் ஸ்டாலின் சோவியத் கட்சியினதும் அரசினதும் தலைமைப் பொறுப்பைக் கையேற்று அடுத்து வந்த 30 வருடங்கள் மிகவும் சிறப்பாக வழிநடாத்தினார்.

லெனின் இறந்த பின்னர் 1924 ஜனவரி 26 அன்று நடந்த சோவியத்துகளின் இரண்டாவது அனைத்து யூனியன் காங்கிரசில் தோழர் லெனின் மறைவையொட்டி தோழர் ஸ்டாலின் நிகழ்த்திய உள்ளத்தைத் தொடும் உணர்ச்சிகரமான உரையைக் கீழே தந்திருக்கிறோம்.

---

‘‘**தோழர்களே,** கம்யூனிஸ்ட்டுகளாகிய நாம் தனிச்சிறப்பு மிக்க வார்ப்புகள். நாம் தனித்தன்மையான பொருளால் வார்க்கப்பட்டிருக்கிறோம். நாம் பாட்டாளிவர்க்கப் போர்த்திறனுள்ள – தோழர் லெனினின் இராணுவத்தை அமைத்தவர்கள். இந்த இராணுவத்தைச் சேர்ந்தவர்கள் நாம் என்பதை விட உயர்ந்த கவுரவம் எதுவும் இருக்க முடியாது. தோழர் லெனினை நிறுவனராகவும் தலைவராகவும் கொண்ட கட்சியின் உறுப்பினர் என்ற பட்டத்தை விட உயர்ந்தது எதுவும் இருக்க முடியாது. இத்தகைய ஒரு கட்சியின் உறுப்பினர் பதவி கிடைப்பது எளிதல்ல. இத்தகைய ஒரு கட்சியின் உறுப்பினராக இருந்து நெருக்கடியையும் தாக்குதலையும் தாங்கிக் கொள்வதும் எல்லோருக்கும் எளிதல்ல. உழைக்கும் வர்க்கத்தின் புதல்வர்களும், ஏழ்மையும் போராட்டமும் கொண்டோரின் புதல்வர்களும், நம்புதற்கரிய நல்குரவுற்றோரின் புதல்வர்களும், வீரதீர முயற்சிகளில் ஈடுபட்டோரும்தான் இத்தகைய கட்சியின் உறுப்பினர்களாக இருக்க முடியும். இதனால்தான் லெனினியவாதிகளின் கட்சி, கம்யூனிஸ்ட்டுகளின் கட்சி, உழைக்கும் வர்க்கத்தின் கட்சி என்று அழைக்கப்படுகிறது.

நம்மிடமிருந்து பிரிந்து சென்ற தோழர் லெனின் கட்சியின் உறுப்பினர் என்ற பெரும் பதவியைத் தூய்மையுடன் பாதுகாக்க நமக்குக் கட்டளையிட்டிருக்கிறார்.

உங்களின் கட்டளையை நேர்மையுடன் நிறைவேற்றுவோம் என்று உறுதி கூறுகிறோம் தோழர் லெனின்.

நம்மிடமிருந்து பிரிந்து சென்ற தோழர் லெனின் கண்ணின் மணி போல் கட்சியின் ஒற்றுமையைக் காக்க வேண்டும் என்று நமக்குக் கட்டளையிட்டிருக்கிறார்.

இந்தக் கட்டளையையும் நேர்மையுடன் நிறைவேற்றுவோம் என்று உறுதி கூறுகிறோம் தோழர் லெனின்.

நம்மைவிட்டுப் பிரிந்து சென்ற தோழர் லெனின் பாட்டாளிவர்க்க சர்வாதிகாரத்தைப் பாதுகாத்து வலுப்படுத்த வேண்டுமென்று நமக்குக் கட்டளையிட்டிருக்கிறார்.

இந்தக் கட்டளையையும் நேர்மையுடன் நிறைவேற்ற அனைத்து முயற்சிகளையும் மேற்கொள்வோம் என உறுதி கூறுகிறோம் தோழர் லெனின்.

நம்மை விட்டுப் பிரிந்து சென்ற தோழர் லெனின் தொழிலாளர்கள் விவசாயிகளின் கூட்டணியை முழு ஆற்றலுடன் வலுப்படுத்த வேண்டுமென்று நமக்குக் கட்டளையிட்டிருக்கிறார்.

இந்தக் கட்டளையையும் நேர்மையுடன் நிறைவேற்ற உறுதி கூறுகிறோம் தோழர் லெனின்.

நம்மை விட்டுப் பிரிந்து சென்ற தோழர் லெனின் குடியரசுகளின் ஒன்றியத்தை விரிவுபடுத்தவும் வலுப்படுத்தவும் வேண்டுமென்று நமக்குக் கட்டளையிட்டிருக்கிறார்.

இந்தக் கட்டளையையும் நேர்மையுடன் நிறைவேற்ற உறுதி கூறுகிறோம் தோழர் லெனின்.

நம்மை விட்டுப் பிரிந்த தோழர் லெனின் கம்யூனிஸ்ட் அகிலத்தின் கோட்பாடுகளுக்கு உண்மையுடன் நடந்து கொள்ள வேண்டும் என்று நமக்குக் கட்டளையிட்டிருக்கிறார். கம்யூனிஸ்ட் அகிலத்தை – உலகம் முழுவதுமுள்ள உழைக்கும் மக்களின் ஒன்றியத்தை விரிவுபடுத்தவும் வலுப்படுத்தவும் உயிரையும் துச்சமெனக் கொள்வோம் என்று உறுதி கூறுகிறோம் தோழர் லெனின்.’’

---

# மைத்திரி சொந்த இடத்திலேயே மண் கவ்வினார்!

‘நல்லாட்சி’ என்று சொல்லிக் கொண்டும், ‘திருவாளர் பரிசுத்தம்’ என்று சொல்லிக் கொண்டும் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன சிறீலங்கா சதந்திரக் கட்சிக்குள் எடுத்துவரும் சர்வாதிகாரத்தனமான நடவடிக்கைகளுக்கு சந்தர்ப்பங்கள் கிடைக்கும் போதெல்லாம் அக்கட்சியின் அங்கத்தவர்களும் பொதுமக்களும் தகுந்த பதிலடி கொடுத்து வருகின்றனர்.

அரசாங்கத்துக்கு எதிராக கூட்டு எதிரணி நடாத்தும் கூட்டங்களில் மட்டுமின்றி, பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத் தேர்தல்களிலும் இதை அவதானிக்க

தொடர்ச்சி 6ம் பக்கம் பார்க்க...

# அழிவுப் பாதையில் சுதந்திரக் கட்சி!

சிறீலங்கா சுதந்திரக் கட்சியின் தற்போதைய தலைவராக ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன இருக்கின்றார். ஆட்சித் தலைவராக இருப்பவரே கட்சித் தலைவராகவும் இருக்க வேண்டும் என்ற மரபு காரணமாக அவருக்கு இந்தப் பதவி கிடைத்துள்ளது. ஆனால் முன்னைய காலங்களில் சுதந்திரக் கட்சித் தலைவர்களாக இருந்தவர்களுக்கும் தற்போதைய தலைவர் மைத்திரிக்கும் அடிப்படையில் ஒரு வேறுபாடு உள்ளது.

முன்னைய தலைவர்கள் ஆட்சி அதிகாரத்தில் இருந்தாலும் கட்சியையும் பாதுகாத்து வந்தனர். ஆனால் மைத்திரியின் வரலாறு அப்படியானதல்ல. மிக நீண்டகாலம் சுதந்திரக் கட்சியின் பொதுச் செயலாளர் என்ற முக்கியமான பதவியை வகித்து வந்த அவர், முதல் நாள் இரவு கட்சியின் தலைவரும் ஜனாதிபதியுமான மகிந்த ராஜபக்சவுடன் அலரி மாளிகையில் ஒன்றாக அமர்ந்திருந்து முட்டை அப்பம் சாப்பிட்டுவிட்டு, அடுத்த நாள் சுதந்திரக் கட்சியின் வாழ்நாள் பொது எதிரியான ஐக்கிய தேசியக் கட்சியுடன் சேர்ந்து எதிரணியின் பொது ஜனாதிபதி வேட்பாளர் என தன்னை அறிவித்தார். அதுமாத்திரமின்றி, பின்னர் சுதந்திரக் கட்சியின் பெரும்பாலானவர்களின் விருப்புக்கு மாறாக ஐ.தே.க. தலைமையிலான அரசாங்கத்துடன் ஒரு பகுதி சுதந்திரக் கட்சியினரை இணைத்து கூட்டரசாங்கத்தையும் ஏற்படுத்தினார்.

பின்னர் நடந்த பொதுத் தேர்தலின் போது கட்சியின் தலைவராக இருந்து கொண்டு, கட்சியின் வெற்றிக்குப் பாடுபடுவதை விடுத்து, தான் நடுநிலைமையாக இருக்கப் போவதாக அறிவித்து, தனது சொந்தக் கட்சி தோல்வியடையவும், ஐ.தே.க. வெற்றி பெறவும் வழிவகுத்தார். இவரது அரசியல் குருவான சந்திரிகவோ, சுதந்திரக் கட்சி தலைமையிலான ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்புக்கு மக்கள் வாக்களிக்க வேண்டாம் எனப் பகிரங்கமாகவே அறிக்கை விடுத்தார்.



அத்துடன் அவரது அழிவு வேலைகள் நின்றுவிடவில்லை. அதன் பின்னர் தனக்குப் பிடிக்காத சுதந்திரக் கட்சி தொகுதி அமைப்பாளர்களை படிப்படியாகப் பதவி நீக்கம் செய்து வருகின்றார். இவ்வாறு பதவி நீக்கம் செய்யப்படுபவர்கள் சாதாரண நபர்கள் அல்ல. கட்சிக்காக நெருக்கடியான நேரங்களிலும் நீண்டகாலமாகவும் உழைத்த பாரம்பரியம் மிக்க குடும்பங்களைச் சேர்ந்தவர்கள். அண்மையில் கூட அவ்வாறு மூன்று பேர் அமைப்பாளர் பதவியில் இருந்து நீக்கப்பட்டுள்ளனர்.

## இராஜாங்கம்

ஒருவர், மாத்தளை மாவட்டத்தைச் சேர்ந்த தம்புள்ள தொகுதியின் அமைப்பாளரரன ஜனக பண்டார தென்னக்கூன். இவர் ஒரு முன்னாள் அமைச்சருமாவார். அதுமட்டுமன்று. இவர் சுதந்திரக் கட்சியின் பிரபல்யமிக்க தலைவர்களில் ஒருவரான ரி.பி.தென்னக்கூனின் மகனாவார். ரி.பி.தென்னக்கூன் எஸ்.டபிள்யு.ஆர்.டி. பண்டாரநாயக்கவுடன் இணைந்து சிறீலங்கா சுதந்திரக் கட்சியை உருவாக்கியவர்களில் ஒருவராவார். பண்டாரநாயக்க அமோக வெற்றி பெற்று பிரதமராகப் பொறுப்பேற்ற 1956 பொதுத் தேர்தலில் முதன்முதலாக நாடாளுமன்றத்துக்குத் தெரிவான ரி.பி.தென்னக்கூன், 1977 தேர்தல்வரை தொடர்ந்து 21வருடங்களாக எல்லாத் தேர்தல்களிலும் வெற்றி பெற்ற ஒருவராவார். 1970 ஆம் ஆண்டுத் தேர்தலின் பின்னர் சிறீமாவோ பண்டாரநாயக்கவின் அமைச்சரவையில் அமைச்சராகவும் பதவி வகித்தவர்.

இதேவேளை, கண்டித் தொகுதியின் அமைப்பாளர் பதவியிலிருந்து நாடாளுமன்ற உறுப்பினர் லோகான் ரத்வத்தையும் மைத்திரி பதவி நீக்கம் செய்துள்ளார். தற்போதும் நாடாளுமன்றப் பிரதிநிதியாக இருக்கும் லோகான் கூட்டு எதிரணியைச் சேர்ந்தவர் என்பதற்காகவே பதவி நீக்கம் செய்யப்பட்டுள்ளார். இவரும் சாதாரணமானவர் அல்ல.

இவர் முன்னாள் இராணுவ அதிகாரியும், சந்திரிகவின் ஆட்சிக் காலத்தில் பிரதிப் பாதுகாப்பு அமைச்சர், மின்சக்தி மற்றும் எரிபொருள் அமைச்சர் போன்ற முக்கியமான பதவிகளை வகித்ததுடன், புலிகளுக்கு எதிரான பல யுத்தங்களை வழிநடத்தியவருமான அனுரத்த ரத்வத்தவின் மகனாவார். அத்துடன் அனுரத்த ரத்வத்த சந்திரிகாவின் தாயார் சிறீமாவோவின் ஒன்றுவிட்ட சகோதரர் என்ற முறையில் சந்திரிகாவின் மாமனாரும் ஆவார்.

இவர் தவிர கூட்டு எதிரணியைச் சேர்ந்த இன்னொரு நாடாளுமன்ற உறுப்பினரான அனுர விதானகமகேயும் கட்சியின் மகியங்கனை அமைப்பாளர் பதவியிலிருந்து மைத்திரியால் பதவி நீக்கம் செய்யப்பட்டுள்ளார்.

இவ்வாறு மைத்திரியின் தலைமையை ஏற்க விரும்பாதவர்களையெல்லாம் சுதந்திரக் கட்சியிலிருநது களையெடுக்கும் கைங்கரியத்தை மைத்திரி தொடர்ந்து மேற்கொண்டு வருகிறார். நீண்ட காலம் கட்சிக்கு உழைத்த குடும்பங்களைச் சேரந்தவர்கள், மக்கள் செல்வாக்குப் பெற்றவர்கள் போன்ற இத்தகைய தலைவர்களை கட்சியை விட்டு ஓரம் கட்டுவதின் மூலம், சதந்திரக் கட்சி பலவீனம் அடையும் என்பதும், அதன் மூலம் ஐ.தே.க. பலமடையும் என்பதும் மைத்திரிக்குத் தெரியாத விடயமல்ல. ஆனால் மைத்திரியின் ஒரே நோக்கம் தனக்கு மூக்குப் போனாலும் தனது அரசியல் எதிரியான மகிந்த ராஜபக்சவுக்கு சகுனப்பிழையாக வர வேண்டும் என்பதுதான்.

சிறீலங்கா சுதந்திரக் கட்சி 1951 இல் உருவான நாளிலிருந்து அதன் ஏகாதிபத்திய – எதிர்ப்பு முற்போக்குக் கொள்கைகள் காரணமாக, அந்தக் கட்சியை அழித்துவிட பிற்போக்கு ஐ.தே.கவும் அதன் ஏகாதிபத்திய எஜமானர்களும் கடும் பிரயத்தனம் எடுத்து வந்திருக்கிறார்கள். ஆனால் அவர்களால் அதைச் சாதிக்க முடியவில்லை. ஆனால் அவர்களது நோக்கத்தை உள்ளிருந்தே நிறைவேற்றுவதற்கு இப்பொழுது ஒரு ஆள் கிடைத்திருக்கிறார்.

# யாழ். பல்கலைக்கழக புதிய உப – வேந்தர் நியமனத்தில் சர்ச்சை!

யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தின் புதிய உப – வேந்தராக திரு.ஆர்.விக்னேஸ்வரன் நியமிக்கப்பட்டிருப்பது சில வட்டாரங்களில் எதிர்ப்பையும், சர்ச்சைகளையும் கிளப்பிவிட்டுள்ளது.

விக்னேஸ்வரனின் நியமனம் குறித்து அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ள இலங்கை ஆசிரியர் சங்கத்தின் பொதுச் செயலாளர் ஜோசப் ஸ்டாலின், உப - வேந்தர் தேர்வுக்கான தேர்தலில் ஆகக் கூடுதலான வாக்குகளைப் பெற்றவரை நிராகரித்துவிட்டு, பெரும் எண்ணிக்கையான வாக்கு வித்தியாசத்தில் இரண்டாம் இடத்துக்கு வந்தவரை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன யாழ். பல்கலைக்கழக உப – வேந்தராக நியமித்ததின் மூலம், யாழ்.பல்கலைக்கழகப் பேரவையின் சுயாதீனத் தன்மையை அவமதித்திருக்கிறார் எனக் கண்டனம் செய்துள்ளார். இது ஜனநாயக விரோதச் செயலாகும் எனவும் சுட்டிக் காட்டியிருக்கிறார்.

இதேவேளை, இந்த நியமனம் குறித்து பொது நிகழ்வு ஒன்றில் கருத்துத் தெரிவித்த யாழ். மறைமாவட்ட ஆயர் வண. ஜஸ்ரின் பேனாட் ஞானப்பிரகாசம்,

“பல்கலைக்கழகப் பேரவையால் முதாவது நபராகத் தெரிவு செய்யப்பட்டவர் இருக்கத்தக்கதாக, அரசியல்வாதிகளின் கால்களில் போய் வீழ்ந்தவர் துணை வேந்தராகத் தெரிவு செய்யப்பட்டிருக்கிறார். இப்படி நியமனம் பெற்றவரை மாணவர்கள் மதிப்பார்களா? கல்வியின் நிலை எங்கே போகிறது?” எனக் காட்டமாகக் கேட்டிருக்கிறார். ஆனால் ஆயர் எந்த அரசியல்வாதிகளின் கால்களின் வீழுந்து உப நேந்தர் பதவியை விக்னேஸ்வரன் பெற்றுக் கொண்டார் என்பதைக் குறிப்பிட்டுத் தெரிவிக்கவில்லை.

அவரின் பேச்சுக்குப் பதில் அளித்து அறிக்கையொன்றை வெளியிட்டுள்ள விக்னேஸ்வரன், தான் அரசியல்வாதிகளின் கால்களில் விழுந்து உப வேந்தர் பதவியைப் பெற்றுக் கொண்டதாக ஆயர் கூறியிருப்பது ஆதாரமற்ற குற்றச்சாட்டு எனக் கூறியிருக்கிறார். அத்துடன், ஒரு மதத்தின் முதல்வராக இருந்து கொண்டு இழிவான வார்த்தைகளைப் பயன்படுத்துவது மரியாதைக்குரியதல்ல எனத் தமது கண்டனத்தையும் ஆயர் மீது தெரிவித்திருக்கிறார்.

**- சிவா**

# தோழர் த.குணரத்தினம் மறைவு!

யாழ்ப்பாண மாவட்டம் மண்டைதீவைப் பிறப்பிடமாகவும், கிளிநொச்சி மாவட்டம் வட்டக்கச்சியை வாழ்விடமாகவும் கொண்ட தோழர் தம்பையா குணரத்தினம் அவர்கள் 2017 ஏப்ரல் 02 ஆம் திகதி தமது 74 ஆவது வயதில் வட்டக்கச்சியில் காலமானார் என்பதை வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கின்றோம்.

தோழர் குணரத்தினம் தமது இளமைக்காலம் முதல் புரட்சிகர இலங்கை கம்யூனிஸ்ட் கட்சியுடன் இணைந்து செயல்பட்ட ஒருவராவார். இறக்கும் வரை தான் கொண்ட கம்யூனிஸ்ட் இலட்சியத்தில் இருந்து சிறிதும் அடி பிசகாமல் வாழந்தார்.

இறுதிச் சடங்கில் பெருந்தொகையான மக்கள் கலந்து கொண்டனர். அவரது விருப்பத்துக்கு இணங்க இறுதிச் சடங்கின் போது புரட்சிகர சக்திகளின் சார்பாக தோழர்கள் கோ.சந்திரசேகரம், சி.இரகுநாதன் ஆகியோர் அரிவாள் - சுத்தியல் பொறித்த செங்கொடி போர்த்தி இறுதி அஞ்சலி செலுத்தினர்.

தோழர் குணரத்தினம் அவர்களின் மறைவால் துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினருக்கு ‘வானவில்’ சார்பாக எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதுடன், அவருக்கு எமது புரட்சிகர அஞ்சலியையும் தெரிவித்துக் கொள்கின்றோம்.

**-ஆசிரியர் குழு**


# நீங்கள் விரும்பினால் இந்த சுருக்கமான குறிப்புகளை வாசிக்கலாம்!

**க**னடாவின் ரொறன்ரோ நகரில் மே 05ஆம் திகதி ‘ஆக்கபூர்வ சிந்தனை மற்றும் செயல்பாட்டுக்கான மக்கள் மையம்’ ஏற்பாடு செய்த மேதினக் கருத்தரங்கிற்கு கனடிய – சோவியத் நட்புறவுச் சங்கத்தின் செயற்குழு உறுப்பினரும், பிரபல ஊடகவியலாளருமான தோழர் Barrie Zwicker அவர்கள் அனுப்பி வைத்த செய்தியை அதன் முக்கியத்துவம் கருதிக் கீழே தந்துள்ளோம்.

“உங்களுடைய நிகழ்வில் கலந்து கொள்ளும்படி எனக்கு விடுத்த அழைப்பையிட்டு நான் மகிழ்வடைகிறேன். ஆனால், அந்த நிகழ்வில் நானும் ஒருவனாகக் கலந்து கொள்ள முடியாதபடி அன்றைய தினம் முன்கூட்டியே ஏற்பாடு செய்த நிகழ்வு ஒன்று தடையாக இருப்பதையிட்டுக் கவலை அடைகின்றேன்.

அதற்குப் பதிலாக இரண்டு நிமிடங்கள் 15 விநாடிகள் எடுத்து சில வார்த்தைகளைக் கூற விரும்புகிறேன்.

இது நடந்தது 1939இல் ஹிட்லர் இரண்டாம் உலக யுத்தத்தை ஆரம்பித்த ஆண்டிலாகும். எனது தந்தை Grenfell அந்த யுத்தத்தில் றோயல் கனடிய விமானப் படையில் பணியாற்றினார். எனது மனைவியின் தந்தை Charlie ஹிட்லருடன் போரிட்ட கனடிய இராணுவத்தில் பணியாற்றினார். Charlie நெதர்லாந்தில் (Holland) கொல்லப்பட்டு அங்கேயே



**Barrie Zwicker**

அடக்கம் செய்யப்பட்டார்.

ஒவ்வொரு நாள் கடக்கும் போதும் எனது மனம் 1939ஆம் ஆண்டையே நினைவு கொள்ளும். தற்பொழுது ஒரு உலகப் பொருளாதார நெருக்கடி ஏற்பட்டிருக்கிறதென்றால், அதற்கான பதில் ஆம். என்பதே. மிகவும் சரியாகச் சொல்வதானால், நான் நினைக்கிறேன், முதலாளித்துவத்தின் நெருக்கடி ஒன்று ஏற்பட்டிருக்கிறது என. முதலாளித்துவம் முன்யோசனை எதுவுமில்லாமல் அழிவுகரமான பாசிசத்தை நோக்கிச் சென்று கொண்டிருக்கிறது. அந்தப் பாசிசம் நினைத்துப் பாரக்க முடியாத அழிவுகரமான மூன்றாம் உலக யுத்தத்தை நோக்கி நகர்ந்து கொண்டிருக்கிறது.

நான் இப்பொழுது “முதலாளித்துவம் எப்படி முடிவுக்கு வரும்?” (How will capitalism end?) என்ற தலைப்பிலான புத்தகம் ஒன்றை வாசித்துக் கொணடிருக்கிறேன். இதன் ஆசிரியர் ஒரு ஜேர்மன்காரர். அவரது பெயர் Wolfgang Streek.

அவரது புத்தகம் பற்றி 28 சொற்களில் எனது பார்வையை முன்வைக்க விரும்புகிறேன். “எமது உலகம் அபிவிருத்தியை நிராகரிக்கின்ற, ஒரு சிறு கூட்டத்தால் ஆளப்படுகின்ற, மக்களுக்குப் பங்கு ஏதுமில்லாத, நிறுவனமயப்பட்ட ஊழலும் சர்வதேச அராஜகமும் நிலவுகின்ற, அதேநேரத்தில் இந்த நோய்களைத் தடுப்பதற்கான வழிவகைகள் அற்ற ஒன்றாக மாறியுள்ளது.”

எதிர்காலம் எப்படி இருக்கப் போகின்றது என்பதையும், அதைச் செய்யக் கூடியவர்கள் யார் என்பதையும் Streek மிகக் கவனமாகத் தவிர்த்து விடுகிறார். ஒரு விவாதத்திற்கு இந்த நிலைமைக்கான தீர்வு எதுவும் இப்பொழுது இல்லாவிடினும், உங்களில் சிலருக்கு இதைத் தடுப்தற்கான வழிவகைகள் புலப்படலாம். நான் ஒரு விடயத்தை நினைக்கிறேன். வரி ஏய்ப்புச் செய்து பணத்தை உறிஞ்சுகின்ற தனிப்பட்ட முதலீட்டாளர்களுக்கு உதவுவதற்குப் பதிலாக, பொதுப்பணத்தை பொது வீடமைப்புக்காக செலவழிப்பது மட்டுமே எல்லோருக்குமான பொது வீடமைப்புக்கான சரியான பாதையாக இருக்கும் எனக் கருதுகிறேன்.

நான் நினைக்கிறேன் காலஞ்சென்ற Leonard Cohen சொன்ன, “நாம் கட்டாயமாக சிறப்பானதைச் செய்ய வேண்டும், ஆனால், அதனால் வெளிவரும் பெறுபேறுகளை நாம் வழி நடாத்தக்கூடாது” என்ற கருத்துடன் எந்த நிலையிலும் Streek உடன்படுவார் எனக் கருதுகின்றேன்.

**தமிழில்: தவம்**

---

**3ம் பக்கத்தொடர்ச்சி…**

முடிகிறது. முதலில் அம்பலாங்கொட ப.நோ.கூ.ச. தேர்தலில் வெளிப்பட்ட இந்தப் போக்கு பின்னர் தென் மாகாணத்தில் நடைபெற்ற தேர்கல்களிலும் வெளிப்பட்டது. இப்பொழுது மைத்திரியின் சொந்த இடமான பொலநறுவவிலேயே அது வெளிப்பட்டுவிட்டது.

பொலநறுவ ப.நோ.கூ.சங்கத்தின் மொத்தமுள்ள 89 நிர்வாக சபை உறுப்பினர்களுக்கான தேர்தலில் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச தலைமையிலான கூட்டு எதிரணி 41 உறுப்பினர்களைப் பெற்று வெற்றியீட்டியுள்ளது. அடுத்ததாக ஐ.தே.க. 33 உறுப்பினர்களைப் பெற்றுள்ளது. ஜனாதிபதி மைத்திரி தலைமையிலான சிறீலங்கா சுதந்திரக் கட்சி வெறுமனே 15 உறுப்பினர்களைப் பெற்று மூன்றாமிடத்துக்குத் தள்ளப்பட்டுள்ளது!

இதைப் பார்க்கும் போது இப்பொழுது எந்தத் தேர்தல் நடந்தாலும் மகிந்த அணியே வெற்றிபெறக்கூடிய சூழல் நிலவுவதையே இந்தத் தேர்தல் முடிவுகள் எடுத்துக் காட்டுகின்றன. அதனால்தான் ரணிலும் மைத்திரியும் கூட்டுச்சேர்ந்து உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தல்களை நடாத்தாது மீண்டும் மீண்டும் ஒத்திப்போட்டு வருகின்றனர்.

# வாசிப்பனுபவம்:

## “வசந்த காலத்திலே” (Springtime in Saken)

### ஸ்டாலின் பரிசு பெற்ற சோவியத் நாவல்

*எழுதியவர் – ஜோர்ஜ் குலியா* (Georgi Guliya)

**சோ**வியத் எழுத்தாளர்களில் குறிப்பிடத்தக்கவரான ஜோர்ஜ் குலியா எழுதிய “வசந்த காலத்திலே” என்ற இந்த நாவல் மொஸ்கோ அயல் மொழிகள் பதிப்பகத்தால் முதன்முதலில் 1949 இல் ஆங்கிலத்தில் வெளியிடப்பட்டது. பின்னர் அதே பதிப்பகத்தால் 1952 இலும் ஒரு பதிப்பு வெளியிடப்பட்டுள்ளது.

இந்த நாவல் அந்த நேரத்தில் சோவியத் யூனியனின் உயரிய பரிசான ஸ்டாலின் பரிசைப் பெற்றதுடன், பல இலட்சம் சோவியத் மக்கள் விரும்பிப் படித்த நாவலாகவும் திகழ்ந்துள்ளது. அத்துடன் பல உலக மொழிகளிலும் இது மொழிபெயர்க்கப்பட்டுள்ளது.

தமிழில் இந்நாவல் தி.க.சிவசங்கரன் (தி.க.சி.) அவர்களின் மொழிபெயர்ப்பாக தோழமை வெளியீட்டு நிறுவனத்தால் 2007 டிசம்பரில் முதல் முதலாக வெளியிடப்பட்டுள்ளது.

சோவியத் இலக்கியம் பல்வேறு காலகட்டங்களைப் பிரதிபலித்து நிற்கின்றது. லியோ டால்ஸ்டாய் காலத்தைய இலக்கியம் அப்போதைய நிலப்புரபுத்துவ ரஸ்ய சமூகத்தைப் பிரதிபலித்தது. மார்க்சிம் கோர்க்கி காலத்து ரஸ்ய இலக்கியம் தொழிலாளர் போராட்டங்களைச் சித்தரித்தது. 1917 இல் லெனின் தலைமையில் மாபெரும் ஒக்ரோபர் சோசலிசப் புரட்சி நிகழ்ந்து ரஸ்யாவில் உலகின் முதலாவது சோசலிச நாடு உருவான பின்னர், சோவியத் இலக்கியங்கள் பெரும்பாலும் சோசலிசக் கட்டுமானங்கள் பற்றியே பேசின.


ஆனால் இரண்டாம் உலக யுத்த காலத்தில் ஹிட்லர் தலைமையிலான பாசிஸ்ட்டுகளுக்கு எதிரான தேசபக்த யுத்தம் நடந்த காலத்து இலக்கியமும், அதன் பின்னரான இலக்கியங்களும் வித்தியாசமானவை. அப்படியான ஒரு சூழலில் எழுதப்பட்டதே ஜோர்ஜ் குலியா எழுதிய “வசந்த காலத்திலே” என்ற இந்த நாவல்.

இந்த நாவல் சோவியத் யூனியனின் காக்கசஸ் மலைப்பகுதியை அண்டிய சாகேன் என்ற, போரினால் அழிந்துபோன ஒரு மிகப் பின்தங்கிய விவசாயக் கிராமத்தில், கூட்டுப்பண்ணை விவசாயிகள் உற்பத்தியைப் பெருக்குவதற்காக நடாத்தும் போராட்டத்தைச் சித்திரிக்கிறது.

ரஸ்யாவில் புரட்சி நடந்து சோசலிச அரசு ஒன்று அமைநதுவிட்ட போதிலும், மிகப்பெரிய அந்த நாட்டின் தொலைதூரப் பிரதேசங்களில் சமூக மாற்றங்கள் மிகமிக மெதுவாகவே நிகழ்வதையும், மக்கள் பழைய சிந்தனையிலும் பழக்க வழக்கங்களிலும் மூழ்கி இருப்பதையும் காட்டுவதுடன், சமூகத்தில் உள்ள முன்னேறிய நபர்களான கம்யூனிஸ்ட்டுகள் அந்த நிலைமையை எப்படிப் பொறுமையுடன் கையாண்டு வெற்றி பெறுகின்றனர் என்பதையும் நன்கு படம் பிடித்துச் சித்தரிக்கின்றது.

சோசலிசப் புரட்சிக்கு முன்னர் ஒரு துண்டு நிலம்கூட சொந்தமாக இல்லாமல் இருந்த முன்னாள் பண்ணை அடிமைகளான இந்த மக்கள், புரட்சிக்குப் பின்னர் அரச அதிகாரத்திலும், உற்பத்தியிலும் பங்குதாரர்களாகி, எப்படி கடுமையாக உழைத்து தமது கிராமத்தை வளமிக்கதாக்குகிறார்கள் என்பதை இந்த நாவல் மிகவும் அருமையாகச் சொல்லியிருக்கிறது.

எங்கேயோ ஒரு மூலையில் இருக்கின்ற சின்னஞ்சிறு கிராமமாக இருந்த போதிலும், தலைநகர் மொஸ்கோவில் இருக்கின்ற தலைவர் ஸ்டாலினும், அவர் தலைமையிலான சோவியத் கம்யூனிஸ்ட் கட்சியும்,




சோவியத் அரசாங்கமும் எப்படி மக்களின் நலனுக்கு முன்னுரிமை கொடுத்துச் செயல்படுகிறார்கள் என்பதையும், இந்த நாவல் மிகவும் அழுததம் திருத்தமாகப் பதிவு செய்திருக்கிறது.

இந்த நாவலின் எழுத்தாளர் ஜோர்ஜ் குலியா 1913 மார்ச் 13 இல் பிறந்து, 1989 ஒக்ரோபர் 18 இல் தமது 76 ஆவது வயதில் காலமாகிவிட்டார். ஆனால் அவரது எழுத்துக்கள் இன்றும் அழியாப் புகழ்மிக்க அமர இலக்கியங்களாகத் திகழ்கின்றன. மக்கள் இலக்கியம் என்ற அவரது எழுத்தின் வலிமை காரணமாக, அவரது அனைத்து நூல்களும் இன்றும் உலகின் பிரதான நூல் விற்பனையாளர்களிடம் விற்பனைக்கு உள்ளன.

**-கங்கை**

## பாரீசில் தோழர் விஸ்வா நூல் பற்றிய வாசிப்பும் கலந்துரையாடலும்

**இ**லங்கை மார்க்சிச – லெனினிச கம்யூனிஸ்ட் கட்சியின் (CPSL – ML) முன்னணி செயற்பாட்டாளர்களில் ஒருவரும், தமிழீழ தேசிய விடுதலை முன்னணி (NLFT), தமிழீழ மக்கள் விடுதலை முன்னணி (PLFT) என்பனவற்றின் ஸ்தாபகருமான தோழர் விசுவலிங்கம் விசுவானந்ததேவன் பற்றி அவருடன் நெருங்கிப் பழகிய 25 பேர் எழுதிய கட்டுரைகள் அடங்கிய தொகுப்பு நூலின்

தொடர்ச்சி 15ம் பக்கம் பார்க்க…




## சீனத் தொழிலாளர்களின் சாதனை!

சீனத் தலைநகர் பீஜிங்கில் பல்லாயிரக்கணக்கான தொழிலாளர்கள் இணைந்து 'சான்யூவன்' என்ற பெயரிலான ஒரு பாலத்தை வெறுமனே 43 மணி நேரத்தில் கட்டிமுடித்து மக்கள் பாவனைக்கு கையளித்திருக்கின்றனர்.

அதுமட்டுமல்ல, இதே குழுவினர் 57 மாடிக் கட்டிடம் ஒன்றை 19 நாட்களில் கட்டிச் சாதனை படைத்திருக்கின்றனர்.

நமது நாட்டில் ஒரு சிறிய வீட்டைக் கட்டுவதானாலும் எத்தனை நாட்கள் பிடிக்கின்றன?

## பொதுமக்களின் நிதியும் அரசியல்வாதியின் நிதியும்!

"பொதுமக்கள் நிறையப் பாவங்கள் செய்கின்றனர். பின்னர் அந்தப் பாவங்களைத் தீர்க்கும்படி கடவுளை வேண்டி காணிக்கை செலுத்துகின்றனர். இதனால் மாநிலம் முழுவதும் உள்ள கோயில்களில் வருமானம் 27 சதவீதம் அதிகரித்துள்ளது"

இப்படிக் கூறியிருக்கிறார் ஆந்திர முதல்வர் சந்திரபாபு நாயுடு.

எல்லாம் சரிதான். பொதுமக்களின் நிதி ஆண்டவனின் கஜானாவுக்குத்தான் போகின்றது. ஆனால் அரசியல்வாதிகள் பொதுமக்களிடம் சுரண்டும் நிதியைத் தமது சொந்தக் கஜானாவில் அல்லவா சேர்த்துக் கொள்கிறார்கள்!

## பெரிய விமானத்தின் புதிய சாதனை!

கட்டார் நாட்டு விமான சேவை நிறுவனத்துக்குச் சொந்தமான மிகப் பெரிய விமானம் ஒன்று உலகின் அதிகம் நீண்டதும், அதிக நேரம் எடுத்ததுமான பிரயாணம் ஒன்றை வெற்றிகரமாக மேற்கொண்டு சாதனை படைத்துள்ளது.

நியூசிலாந்தின் Auckland நகரில் இருந்து புறப்பட்ட இந்த விமானம் இடையில் எங்கும் நிறுத்தப்படாமல் 9,032 மைல்களை 17 மணி நேரத்தில் பறந்து கட்டார் தலைநகர் டோகாவை வந்தடைந்துள்ளது.

## உலகின் வயது கூடிய பெண்மணி!

Emma Morano என்ற 116 வயதுடைய இத்தாலிய நாட்டுப் பெண்மணியே இப்பொழுது உலகின் ஆக வயது கூடிய பிரசையாக இருக்கிறார். இவரையும் விட வயது கூடிய Susannah Mushatt என்பவர் 2016 மே 12 இல் நியுயோர்க் நகரில் காலமான பின்னர், இந்த இத்தாலியப் பெண்மணி முதலாமிடத்துக்கு வந்துள்ளார்.

## ஈரானிய அழகிகளுக்கு வந்த வினை!

இஸ்லாமியச் சட்டங்களைக் கடுமையாகப் பின்பற்றும் ஈரானில் தலையை முக்காடு போட்டு மறைக்காமல் சமூக வலைத்தளங்களில் தமது படங்களை வெளியிட்ட எட்டு மொடல் அழகிகளை அந்நாட்டு அதிகாரிகள் கைது செய்திருக்கின்றனர்.

## இந்தியாவின் உயரமும் பாகிஸ்தானின் அச்சமும்!

இந்தியா தனது தேசியக் கொடியைப் பறக்கவிடுவதற்காக பாகிஸ்தான் எல்லையில் 360 அடி உயரமான கொடிக் கம்பம் ஒன்றை நிறுவியுள்ளது. இந்த உயரிய கம்பத்தில் உளவுத் தேவைகளுக்குப் பயன்படும் ஒளிப்படக் கருவி பொருத்தப்பட்டிருக்கலாம் என பாகிஸ்தான் தரப்பில் அச்சம் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

## சட்ட விரோதத்துக்கு சட்ட அங்கீகாரம்!

பலஸ்தீனர்களுக்குச் சொந்தமான காணிகளில் அமைக்கப்பட்டுள்ள சட்டவிரோதமான யூதக் குடியிருப்புகளை சட்டபூர்வமாக்கும் சட்ட மூலம் ஒன்றை இஸ்ரேலிய நாடாளுமன்றம் நிறைவேற்றியுள்ளது. இச்சச் சட்ட மூலத்துக்கு எதிராக இஸ்ரேலிய உச்ச நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்ய மனித உரிமை அமைப்புகள் தீர்மானித்துள்ளன.

## நமது மூதாதையர்கள் பயன்படுத்திய கருவிகள்!

மனித இனத்தின் மூதாதையர்கள் 250,000 ஆண்டுகளுக்கு முன்னரே மிருகங்களின் இறைச்சியைப் புசிப்பதற்கு கருவிகளை உபயோகித்திருக்கிறார்கள் என்பதற்கான திட்டவட்டமான ஆதாரம் கிடைத்திருப்பதாக ஆய்வுகளில் தெரிய வந்திருப்பதாக Journal of Archaeological Science என்ற சஞ்சிகை தெரிவித்திருக்கிறது.

கனடாவின் விக்ரோறியா பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த ஆய்வாளர்கள் ஜோர்டான் நாட்டின் வட கிழக்குப் பகுதியில் நமது மூதாதையர்கள் பயன்படுத்தியதாக நம்பப்படும் கருவிகளை ஆராய்ந்ததில் அவற்றில் மிருகங்களின் இரத்தம் இருந்தது கண்டறியப்பட்டதின் காரணமாக இந்தத் தகவல் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

## அமெரிக்காவின் ஆயுள் கூடிய மரம் தளபாடமாகிறது!

அமெரிக்காவின் நியுயேர்சி மாநிலத்திலுள்ள 600 வருடம் பழமை வாய்ந்த வெள்ளை ஒக் மரத்தின் (White Oak) ஆயுள்காலம் முடிவுக்கு வந்துள்ளது. அதன் மரத்திலிருந்து அங்குள்ள தேவாலயம் ஒன்றுக்கு மேசைகளும், நகர மண்டப கூட்ட அறைக்கு மேசைகளும் செய்யப்படவுள்ளன. இந்த மரத்தின் நிறை 116,000 இறாத்தல்கள் ஆகும்!

# அரசாங்கத்திற்குள் வளர்ந்து வரும் எதிரும் புதிருமான போக்குகள்!

**"ந**ல்லாட்சி'' அரசாங்கத்தின் இரண்டு பங்காளிக் கட்சிகளுக்கும் இடையிலான முரண்பாடு நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக வளர்ந்த வண்ணம் இருக்கிறது. அதில் ஒன்று புதிய அரசியல் சாசனம் சம்பந்தமான சர்ச்சை.

அரசாங்கம் கொண்டுவரப்படவுள்ள அரசியல் சீர்திருத்தங்களை அரசைச் சேர்ந்த சிலர் பதிய அரசியல் அமைப்பு என்கின்றனர். வேறு சிலர் தற்பொழுது நடைமுறையில் இருக்கின்ற 1978 ஆம் ஆண்டு அரசியல் அமைப்புக்கான திருத்தங்கள் என்கின்றனர்.

புதிய அரசியல் அமைப்போ அல்லது திருத்தமோ அதற்காக சர்வஜன வாக்கெடுப்பு நடத்தப்படும் என ஐக்கிய தேசியக் கட்சியைச் சேர்ந்த சுகாதார அமைச்சர் ராஜித சேனரத்ன கூறி வருகிறார். ஆனால் அரசாங்கத்தின் பங்காளிக் கட்சியான சிறீ லங்கா சுதந்திரக் கட்சியைச் சேர்ந்தவர்கள் சர்வஜன வாக்கெடுப்பு நடத்தப்படமாட்டாது எனக் கூறுகின்றனர்.

அண்மையில் இவ்வருடம் நடைபெறவிருக்கும் முதலாவது தேர்தலாக புதிய அரசியல் அமைப்புக்கான சர்வஜன வாக்கெடுப்பு இருக்கும் என அமைச்சர் ராஜித கூறினார். ஆனால் அதை மறுத்துள்ள சுதந்திரக் கட்சியைச் சேர்ந்தவரும், ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் பொதுச் செயலாளரும், அமைச்சருமான மகிந்த அமரவீர முதலில் நடைபெறப்போவது உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தல்களே என்று கூறியிருக்கிறார்.

அமைச்சர்கள் மட்டத்தில் மட்டுமின்றி, அரச தலைவர்கள் மட்டத்திலும் முரண்பாடான போக்கு இருப்பதை அவதானிக்க முடிகிறது. இவ்வருட மேதினத்தை ஒன்றிணைந்த எதிரணி காலிமுகத்திடலில் நடத்துவதற்கு தான்தான் ஏற்பாடு செய்ததாக பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்திருந்தார். ஆனால் சில நாட்கள் கழித்து தான்தான் எதிரணியினருக்கு காலிமுகத்திடலை வழங்க ஏற்பாடு செய்திருப்பதாக ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன கூறியிருக்கிறார்.

இத்தகைய போக்கால் ஒரே நேரத்தில் இரண்டு படகுகளில் பயணம் செய்யும் அரசாங்கத்தால் நாட்டு மக்களின் அடிப்படைப் பிரச்சினைகளைத் தீர்க்க முடியுமா என்ற கேள்வி எழுந்துள்ளது.

# ஹக்கீமுக்கு ஏற்பட்ட காலம் பிந்திய ஞானோதயம்!

**"இ**ஸ்ரேலுக்கு எதிராக யுனெஸ்கோ அமைப்பினால் கொண்டுவரப்பட்ட பிரேரணை மீதான வாக்கெடுப்பில் இலங்கை கலந்து கொள்ளாமை சர்வதேச ரீதியாக தவறான முன்னுதாரணத்தை ஏற்படுத்தி விட்டது.

பாலஸ்தீனம் தொடர்பிலான எமது நிலைப்பாட்டை நாம் அறிவிக்க வேண்டும். பாலஸ்தீனத்துக்கும் இலங்கைக்கும் இடையில் நெருங்கிய தொடர்பு காணப்படுகிறது. இவ்விரு நாடுகளுக்குமிடையிலான நட்பு பலமாகக் காணப்படுகிறது. அந்நாட்டு மக்களின் குறிக்கோள்கள் தொடர்பாக எமது வெளிநாட்டுக் கொள்கையிலும் பிரதானமாகச் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

இவ்வாறான நிலையில் மேற்படி வாக்கெடுப்பில் கலந்து கொள்ளாது இலங்கை அரசு புறக்கணித்தமையானது இஸ்ரேலின் செயற்பாடுகளுக்கு ஆதரவளிக்கும் வகையில் இருக்கின்றது.''

இவ்வாறு நாடாளுமன்றத்தில் பேசும்போது தெரிவித்திருக்கிறார் சிறீலங்கா முஸ்லீம் காங்கிரஸ் தலைவரும், அமைச்சருமான ரவூப் ஹக்கீம்.

இலங்கையின் தற்போதைய மேற்கத்தைய சார்பு அரசின் இஸ்ரேல் சார்பான போக்கை ஐ.நாவில் யுனெஸ்கோ தீர்மானத்தில் இலங்கை வாக்களிக்காமல் ஒதுங்கிய போதே 'வானவில்' சுட்டிக் காட்டியிருந்தது. ஆனால் முஸ்லீம் மக்களின் ஏகப் பிரதிநிதி என்று சொல்லிக் கொள்ளும் முஸ்லீம் காங்கிரசின் தலைவருக்கு இலங்கை அரசின் இந்த பாலஸ்தீன விரோதப் போக்கைப் பற்றிப் பேசுவதற்கு பல மாதங்கள் எடுத்திருக்கிறது. அதுவும் அரசுக்கு நோகாத வகையில்தான் ஹக்கீம் தனது கருத்தைத் தெரிவித்திருக்கிறார். இங்கே, அரசின் பங்காளியான அவருக்கு தனது அரசு இஸ்ரேலுக்குச் சார்பாகச் செயல்படப் போகின்றது என்பது எவ்வாறு தெரியாமல் போனது என்ற கேள்வி எழுகின்றது.

மாறிமாறி வரும் அரசுகளில் ஏதாவது சாக்குப் போக்குகளைச் சொல்லி இணைந்து கொண்டு அமைச்சுப் பதவிகளைப் பெற்று, தமது சொந்த சொத்துச் சுகங்களைப் பாதுகாப்பவர்கள், மக்கள் பிரச்சினைகள் என்று வரும்போது மட்டும் மாதக்கணக்கில் சிந்திக்கிறார்கள் போலும்!

**– இத்திரீஸ்**

# தோழர் "சண்" முதலாவது ஆண்டு நினைவு

2016 ஏப்ரல் 07 ஆம் திகதி கனடாவில் காலமான நெடுந்தீவைப் பிறப்பிடமாகக் கொண்ட தோழர் சின்னத்தம்பி சண்முகநாதன் அவர்களின் முதலாவது நினைவு தினம் அவரது குடும்பத்தினராலும், தோழர்கள் நண்பர்களாலும் உணர்வுபூர்வமாக அனுட்டிக்கப்பட்டது. அவரது நினைவாக ஏப்ரல் 07 ஆம் திகதி கிளிநொச்சி – உருத்திரபுரம் ஏழாம் வாய்க்காலில் (ஜெயந்திநகர்) உள்ள குருகுலப் பாடசாலைப் பிள்ளைகளுக்கு மதிய போசனம் வழங்கப்பட்டது. இந்நிகழ்வில் அவரது மகள், சகோதரர் உட்பட தோழர்கள் பலரும் கலந்து கொண்டனர்.

பன்முக ஆற்றல் கொண்ட தோழர் சண், நெடுந்தீவு முற்போக்கு வாலிபர் இயக்கத்தை உருவாக்கிய முன்னோடிகளில் ஒருவராகவும், அதன் முதலாவது செயலாளராகவும் பணி புரிந்தவர். பின்னர் கம்யூனிஸ்ட் இயக்கத்தில் தன்னை இணைத்துக் கொண்ட அவர், இலங்கை மார்க்சிச – லெனினிச கம்யூனிஸ்ட் கட்சியின் வட பிரதேசக் குழு உறுப்பினராகவும், அக்கட்சியால் உருவாக்கப்பட்ட தமிழ் மக்கள் ஜனநாயக முன்னணியின் முதலாவது பொதுச் செயலாளராகவும் செயலாற்றியவர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

கனடாவில் வாழ்ந்த காலத்தில் இலங்கை இடதுசாரிகள் கூட்டமைப்பு – கனடா மற்றும் 'வானவில்' பத்திரிகைக் குழு என்பனவற்றுடன் இணைந்து செயல்பட்டார்.

'வானவில்' இதழ் தோழர் சண்முகநாதனை அவரது ஓராண்டு நினைவு தினத்தில் உணர்வுபூர்வமாக நினைவு கூர்கிறது.

**ஆசிரியர் குழு, 'வானவில்'**



# மேதினத்தன்று காலிமுகத்திடலில் திரண்ட சன சமுத்திரம் சொல்லும் சேதி என்ன?

**தெ**ன்னாசிய நாடுகளிலேயே இலங்கையில்தான் மேதினம் வெகுசிறப்பாகக் கொண்டாடும் வழக்கம் உள்ளது எனச் சொல்லலாம். அதேநேரத்தில் இங்குதான் தொழிலாளர்களின் கட்சிகள் மட்டுமின்றி, கடைந்தெடுத்த முதலாளித்துவக் கட்சியான ஐக்கிய தேசியக் கட்சியும் பிற்போக்கு தமிழ் கட்சிகளும் மேதினத்தைக் கொண்டாடும் விந்தையும் நடைபெறுகிறது.

ஆனால் பிரித்தானிய ஏகாதிபத்தியம் இலங்கையை அடிமைப்படுத்தியிருந்த காலத்தில் மட்டுமின்றி, 1948இல் இலங்கைக்கு சுதந்திரம் கிடைத்த பின்னர் ஐ.தே.க. ஆட்சி அதிகாரத்துக்கு வந்த பின்னர் கூட, 19656இல் எஸ்.டபிள்யு.ஆர்.டி. பண்டாரநாயக்க தலைமையில் ஆட்சி அமையும் வரை இந்த நாட்டின் உழைக்கும் மக்கள் மேதினத்தை சுதந்திரமாகக் கொண்டாட ஐ.தே.க. அரசு அனுமதிக்கவில்லை.

பண்டாரநாயக்க ஆட்சி அதிகாரத்துக்கு வந்த பின்னரே மேதினம் சம்பளத்துடன் கூடிய விடுமுறை தினமாகக் கொண்டாடுவதற்கு அனுமதி அளிக்கப்பட்டது. அப்படி இருந்தும் கூட 1966இல் அப்போதைய ஐ.தே.க. தலைமையிலான அரசில் பிற்போக்கு தமிழ் கட்சிகளான தமிழரசுக் கட்சியும், தமிழ் காங்கிரஸ் கட்சியும் இணைந்திருந்ததால் அக்கட்சிகளின் தூண்டுதலால் யாழ்ப்பாணத்தில் மட்டும் மேதினம் தடை செய்யப்பட்டது. ஆனால் புரட்சிகர கம்யூனிஸ்ட் கட்சி அந்தத் தடையையும் மீறி யாழ்ப்பாணத்தில் மேதின ஊர்வலத்தையும், பொதுக் கூட்டத்தையும் நடாத்தியது.

அதேபோல அதே அரசாங்கம் 1969இல் மேதினமும், வெசாக் தினமும் ஒரே நாளில் வந்ததைக் காரணம் காட்டி நாடு முழுவதும் மேதினத்தை மே முதலாம் திகதி நடாத்தக்கூடாது எனத் தடை செய்தது. அந்த முறையும் புரட்சிகர கம்யூனிஸ்ட் கட்சி மட்டும் தடையை மீறி கொழும்பிலும் யாழ்ப்பாணத்திலும் ஊர்வலங்களையும் பொதுக் கூட்டங்களையும் நடாத்தியது.

அதுமட்டுமின்றி, 1977இல் ஜே.ஆர.ஜெயவர்த்தன தலைமையில் ஐ.தே.க. அரசு அமைந்தபோது அவரது அரசு இடதுசாரிக் கட்சிகளையும், தொழிற்சங்கங்களையும், அவர்கள் நடாத்திய பத்திரிகைகளையும் தடைசெய்ததுடன், தொழிலாளர்கள் அக்கட்சிகளின் மேதின நிகழ்வுகளில் கலந்து கொள்வதைத் தடை செய்வதற்காக அன்றைய தினம் நாடு முழுவதுமுள்ள சினிமாக் கொட்டகைகளில் கட்டணம் எதுவுமின்றி படம் பார்ப்பதற்கு ஏற்பாடு செய்ததுடன், வட இந்தியாவில் இருந்து சினிமா நடிகர்களையும் பாடகர்களையும் அழைத்தது வந்து காலிமுகத்திடலில் களியாட்டங்களையும் நடாத்தியது. இருந்த போதிலும் தொழிலாளி வர்க்கத்தின் மேதின உணர்வுகளைத் தடுக்க முடியவில்லை.

புலிகள் வடக்கு கிழக்குப் பகுதிகளில் ஆதிக்கம் செலுத்திய காலத்தில் யாழ்ப்பாணத்தில் செயல்பட்டுக் கொண்டிருந்த இடதுசாரிகள் தலைமையிலான தொழிற்சங்கக் கூட்டுக் குழுவைத்

தடை செய்ததுடன், தம்மைத் தவிர வேறு எவரும் மேதின நிகழ்வுகளை நடாத்தக்கூடாது எனத் தடையும் விதித்தனர். அதுமாத்திரமின்றி, வடக்கின் இரண்டு பிரபல்யமான இடதுசாரித் தொழிற்சங்கவாதிகளான எஸ்.விஜயானந்தன், ஆ.க.அண்ணாமலை ஆகியோரைச் சுட்டுப் படுகொலையும் செய்தனர்.

இலங்கையைப் பொறுத்தவரை இன்று மேதினம் என்பது அதன் சர்வதேசத் தன்மையையும் புரட்சிகரத் தன்மையையும் இழந்து அரசியல் கட்சிகளின் பலத்தைக் காட்டும் களியாட்ட விழாவாக மாறியுள்ளது. தொழிலாளர்கள் வர்க்க உணர்வுடன் தாமாகவே மேதின நிகழ்வுகளில் கலந்து கொள்ளும் நிலைமை மாறி, கட்சிகள் தமது ஆதரவாளர்களுக்கு மதுபானம், உணவுப் பார்சல், பணம் என்பன கொடுத்து வாகனங்களில் அழைத்து வந்து மேதின நிகழ்வுகளை நடாத்தும் இழிவான நிலை தோன்றியுள்ளது. இம்முறை மேதின நிகழ்வுகளுக்காக ஆட்சியிலுள்ள இரண்டு பங்காளிக் கட்சிகளும், இந்த அரசாங்கத்தைப் பதவிக்குக் கொண்டு வருவதில் பங்கு வகித்த ஜே.வி.பியும் மொத்தமாக 5,000 பஸ் வண்டிகளைத் தமது மேதின நிகழ்வுகளுக்கு தமது ஆதரவாளர்களை ஏற்றிச் செல்வதற்காக ஏற்பாடு செய்திருந்தனர் என்பதிலிருந்தே நிலைமையைப் புரிந்து கொள்ளலாம்.

இந்த நிலைமையைப் பார்க்கும் போது ஒரு சம்பவம் நினைவுக்கு வருகிறது. 1970களில் எமது புரட்சிகர கம்யூனிஸ்ட் கட்சி யாழ்ப்பாணத்தில் ஒரு மேதினத்தன்று ஆர்ப்பாட்ட ஊர்வலத்தையும், அங்குள்ள முற்றவெளி மைதானத்தில் பொதுக் கூட்டத்தையும் ஏற்பாடு செய்திருந்தது. கிளிநொச்சியிலிருந்து நாம் பெருமளவில் அதில் பங்குபற்றினோம். யாழ்ப்பாணம் போனபின்னர்தான் எமக்கு ஒரு விடயம் தெரிய வந்தது. கிளிநொச்சி கனகபுரம் படித்த வாலிபர் திட்டத்தைச் சேர்ந்த நவரத்தினம் என்ற ஒரு தோழர் பஸ்சுக்குப் பணமின்மையால் எமக்குத் தெரியாமலே கிளிநொச்சியிலிருந்து யாழ்ப்பாணம் வரை கால்நடையாக மேதின நிகழ்வில் கலந்துகொள்ள வந்திருக்கிறார்!

இன்றைய நிலைமைகள் இவ்வாறு இருப்பினும், நீண்டகாலத்தின் பின்னர் மிகவும் உணர்ச்சிகரமானதும் பிரமாண்டமானதுமான ஒரு மேதினக் கூட்டம் கொழும்பு காலிமுகத்திடலில் கூட்டு எதிரணியினால் நடாத்தப்பட்டது மனநிறைவைத் தருகிறது.

அரசாங்கம் திட்டமிட்டே எதிரணிக்கு காலிமுகத்திடலை ஒதுக்கியது. ஏனெனில் எத்தனை ஆயிரம் மக்கள் கூடினாலும் அந்த இடத்தில் கொஞ்சப்பேராகவே காட்சியளிப்பர். அவ்வளவுக்கு அந்த இடம் மிகவும் பிரமாண்டமானது. ஆனால் அரசாங்கம் மட்டுமின்றி, கூட்டத்தை ஒழுங்கு செய்த எதிரணியே எதிர்பார்த்திருக்காத அளவுக்கு திடல் முழுவதும் மக்களால் நிரம்பி வழிந்தது. ஒரு பக்கத்தில் சமுத்திர வெள்ளம் என்றால், மறுபக்கத்தில் சன வெள்ளம். அவ்வளவும் தாங்களாகத் தீர்மானித்து வந்த உணர்வுமிக்க மக்கள் கூட்டம். ஐ.தே.க., சிறீ.ல.சு.க., ஜே.வி.பி. ஆகியவற்றின் கூட்டங்களுக்குத் திரண்ட முழு மக்கள் தொகையையும் விடக் கூடுதலான மக்கள் எதிரணியின் மேதினக் கூட்டத்தில் மட்டும் திரண்டனர்.

இதுபற்றி என்னிடம் கருத்துத் தெரிவித்த கொழும்பிலுள்ள ஒரு மூத்த இடதுசாரித் தொழிற்சங்கவாதி, 1963ஆம் ஆண்டு இடதுசாரி ஐக்கிய முன்னணி தொழிலாளர்கள் சார்பாக 21 கோரிக்கைகளை விலியுறுத்தி காலிமுகத்திடலில் நடாத்திய பிரமாண்டமான பொதுக்கூட்டத்திற்குப் பின்னர் இந்தமுறை கூட்டு எதிரணி நடாத்திய மேதினக் கூட்டமே பிரமாண்டமானது எனக் கூறினார். அன்றைய இடதுசாரி ஐக்கிய முன்னணிப் பொதுக்கூட்டத்தில் சுமார் 15 இலட்சம் மக்கள் கலந்து கொண்டதாக பத்திரிகைகள் மதிப்பீடு செய்திருந்தன. இடதுகாரி முன்னணியினர் நடாத்திய ஊர்வலம் ஒரு இடத்தைக் கடக்க மூன்றரை மணித்தியாலங்கள் எடுத்தது!

கூட்டு எதிரணியின் இந்தப் பிரமாண்டமான மேதினக் கூட்டம் இலங்கை அரசாங்கத்துக்கும், உலகத்துக்கும் ஒரு செய்தியை விடுத்துள்ளது. அதாவது தற்போது ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவினாலும், பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவினாலும் தலைமை தாங்கப்படும் இந்த மேற்கத்தைய சார்பு அரசாங்கம் மக்கள் செல்வாக்கை இழந்துவிட்டதால், அது உடனடியாகப் பதவி விலகி, பொதுத் தேர்தல் ஒன்றின் மூலம் புதிய அரசு ஒன்று அமைவதற்கு வழி செய்ய வேண்டும் என்பதே அந்தச் செய்தியாகும்.

– **தோழர் மணியம்**

# கனடாவில் மேதினம்




**வ**ழமைபோல இவ்வாண்டும் உலகப் பாட்டாளி வர்க்கத்தின் புரட்சிகரமான தினமான மேதினம் கனடாவில் ஆக்கபூர்வ சிந்தனை மற்றும் செயற்பாட்டு மையத்தினால் (Centre for Creative Thoughts and Action) நினைவுகூரப்பட்டது. மேதினத்தையொட்டி கருத்தரங்கு ஒன்றை அம் மையம் ரொறன்ரோ – ஸ்காபரோ சிவிக் சென்ரர் சபா மண்டபத்தில் மே 05 ஆம் திகதி மாலை 6.30 மணி முதல் 9.30 மணி வரை நடாத்தியது.

கருத்தரங்கிற்கு தோழர் சி.பாலசுப்பிரமணியம் தலைமை வகித்தார். கருத்தரங்கில் கனடிய கம்யூனிஸ்ட் கட்சி மற்றும் முற்போக்கு கனடிய – பாகிஸ்தானியர் அமைப்பு என்பனவற்றின் சார்பாக தோழர்கள் ஓமர் லத்தீப், அபாஸ் ஆகியோர் கலந்து கொண்டனர். தோழர் ஓமர், ''இன்றைய உலகப் பொருளாதார நெருக்கடியும் சர்வதேச தொழிலாளர் இயக்கமும்'' என்ற தலைப்பில் உரை நிகழ்த்தினார்.

அவரது உரையைத் தொடர்ந்து கருத்தரங்கில் கலந்து கொண்டவர்களால் கலந்துரையாடல் ஒன்றும் நிகழ்த்தப்பட்டது.

# புரட்சியின் நூற்றாண்டில் சில கேள்விகள்!

**முதலாளித்துவம் முடிவுறும் என்ற எண்ணமே சுகமாகத்தான் இருக்கிறது**



வானைப் பிளக்கின்றன குரல்கள்.. ‘சோஷலிஸம் வீழ்ந்துவிட்டது, சோவியத் ஒன்றியம் சிதறுண்டதுடன் கனவுகள் சிதறிவிட்டன. பெர்லின் சுவரின் இடிபாடுகளில் சோஷலிஸம் புதைக்கப்பட்டுவிட்டது. இனி, முதலாளித்துவத்துக்கு முடிவில்லை’ என்று எக்காளமிடுகிறார்கள். ‘முதலாளித்துவத்துக்கு மாற்று ஏதும் இல்லை’ என்ற அகங்கார முழக்கம் எழுப்புகிறார்கள். அதேசமயம், இவற்றையெல்லாம் மறுக்கும் எதிர்மறை உணர்வுகளும் கொந்தளிக்கத்தான் செய்கின்றன.

அனைத்துக் கொடுமைகளுக்கும் மூலாதாரம் மூர்க்கத்தனம் கொண்ட இன்றைய முதலாளித்துவம்தான் என்கின்ற உண்மையும் மக்களுக்கு மெல்லப் புரியத் தொடங்கியிருக்கிறது. முதலாளித்துவக் கோட்டைகளிலிருந்தே எதிர்க் குரல்கள் ஒலிக்கின்றன.

## நாணயத்தின் இரு பக்கங்கள்

நவம்பர் புரட்சியின் நூற்றாண்டைக் கொண்டாடும் தருணத்தில், சில கேள்விகள். 19-ம் நூற்றாண்டின் பிற்பகுதியில் மார்க்ஸியம் உருவாக்கிய அரசியல்-பொருளாதாரச் சித்தாந்தத்தின் ஆன்ம லட்சியம் என்ன? மார்க்ஸின் தீர்க்கதரிசனம் பல காரணங்களால் 20-ம் நூற்றாண்டில் பொய்த்துவிட்டது. 21-ம் நூற்றாண்டில் அது மெய்யாகுமா?

ஒன்றை நாம் ஏற்றுக்கொள்ள வேண்டும். சோஷலிசத்துக்கான இயக்கம் பின்னடை வுகளைச் சந்தித்திருக்கிறது. சோவியத் ஒன்றியம் சிதறுண்டதே அதன் முக்கிய சாட்சி. எதிரிகளின் தாக்குதலைச் சந்திக்க வேண்டுமென்றால், இடதுசாரி இயக்கங் களுக்குச் சுய விமர்சனமும், தவறு களைத் திருத்திக்கொள்ளும் முதிர்ச்சியும் தேவை.

முதல் பாடம், சோஷலிஸமும் ஜனநாயக மும் ஒரு நாணயத்தின் இரு பக்கங்கள். ஜனநாயகமின்றி சோஷலிஸமில்லை சோஷலிஸமின்றி ஜனநாயகம் இல்லை. இதனை மறுத்துச் செய்துகொள்ளும் சமரசங்கள் மார்க்ஸியத்தின் மன்னிக்கவியலா திரிபுகள். சோவியத் ஒன்றியத்தில் பாட்டாளி வர்க்க சர்வாதிகாரம் வர்க்க சமுதாயத்தை ஒழிப்பதைவிட்டு, ஒரு மோசமான மேலாண்மை வர்க்கத்தை உருவாக்கிவிட்டது. ஜனநாயகம் மறுக்கப்பட்டது என்ற விமர்சனங்கள் சோவியத் ஒன்றியத்துக்கு மட்டுமல்ல, பல நாடுகளின் கம்யூனிஸக் கட்சிகளுக்கும் பொருந்தும். 21-ம் நூற்றாண்டின் சோஷலிஸம் இத்தவறுகளையெல்லாம் விடுத்து, பன்முக ஜனநாயகத்துக்கு வழிவகுக்க வேண்டும்.

## சோஷலிஸ சமுதாயம்

20-ம் நூற்றாண்டின் சோஷலிஸ அரசுகள், முதலாளித்துவ நாடுகளுடன் முதலாளித்துவத் தளத்திலேயே போட்டி போட்டுக்கொண்டு, அவற்றை எட்டிப் பிடித்து விட வேண்டும் என்ற குறிக்கோளுடன் செயல்பட்டன. தங்களுக்கென்ற தனிப் பாதையை வகுக்கத் தவறிவிட்டன. அது தற்கொலைப் பாதையாயிற்று.

மார்க்ஸியம் பொருளாதார உற்பத்திச் சக்திகளின் வளர்ச்சிக்குத்தான் முன்னுரிமை அளிக்கிறது என்பது தவறு. சோஷலிஸ சமுதாயம் வடிவெடுக்கும்போது, அதன் உற்பத்திச் சக்திகளின் வளர்ச்சியுடன் கூடவே உருவாக வேண்டியவன் சோஷலிஸ மனிதன். அவன் முதலாளித்துவ சமு தாய மனிதனிலிருந்து முற்றிலும் வேறு பட்டவன். சிந்தனையில், உணர்வுகளில், லட்சியங்களில், உழைப்பில், நம்பிக்கை களில், விழுமியங்களில் மாறுபட்டவன். இதை மறந்து, சோவியத் யூனியனும், மற்ற புரட்சிக்குப் பிந்தைய சமுதாயங்களும், உற்பத்திச் சக்தியின் வளர்ச்சியில் மட்டும் கவனத்தைச் செலுத்தின. ஒரு புதிய சோஷலிஸ மனிதனை உருவாக்கத் தவறிவிட்டன.

முதலாளித்துவம் முடிவுறும் என்ற எண்ணமே சுகமாகத்தான் இருக்கிறது. ஆனால், அதற்கு முன் ஒரு பயங்கர ஊழித் தாண்டவம் ஆடிவிட்டுத்தான் அது சாகும். இன்றைய நிதி மூலதனம் உண்மைப் பொருளாதாரத்திலிருந்து வெகுதூரம் விலகிச் சென்றுவிட்டது. சூதாட்டம்தான் இன்று அதன் பிரதான வடிவம். அதன் மாய வலையில் உலகம் முழுவதையும் கட்டிப்போட்டிருக்கிறது. அதிலிருந்து தப்புவது எளிதல்ல.

## முதலாளித்துவத் தந்திரங்கள்

நெருக்கடியில் சிக்கித் தவிக்கும் முதலாளித்துவப் பொருளாதாரத்தின் அச்சாணி ராணுவத் தளவாடங்கள் உற்பத்தி. அதற்கான சந்தை உலகெங்கும் வியாபித்துள்ளது. அதன் வியாபாரம் செழிக்க வேண்டுமென்றால், லாபம் பெருக வேண்டுமென்றால் போர்கள் மூண்டுகொண்டே இருக்க வேண்டும். போர்களைத் தூண்டுவதும், ஒற்றுமையை உடைப்பதும், விரோதங்களை வளர்ப்பதும், அந்தப் பேரழிவில் முதலீடு செய்வதும், அதன் வியாபாரத் தேவைகள், வியாபாரத் தந்திரங்கள்.

இன்று உலகாளும் முதலாளித்துவம் வன்முறையின் பாதுகாவலன், அமைதியின் பேரெதிரி. உலக வரலாறு

முழுவதிலும் இத்தனை பிரம்மாண்ட சர்வ சக்தி கொண்ட ஓர் ஆதிக்க வல்லமை இதற்கு முன் இருந்ததே இல்லை. இந்தக் கொடூர எதிரியின் அனைத்துப் பரிமாணங்களையும், அனைத்து சாணக்கிய ராஜதந்திரங்களையும் புரிந்து கொண்டுதான் மக்களின் எதிர்ப்பு இயக்கங்கள் கட்டப்பட வேண்டும்.

**வளர்ச்சிக்கான மார்க்கம்**

ஒன்று நிச்சயம். சோஷலிஸம் கனிந்து, ஆகாயத்திலிருந்து தானாக நம் மடியில் விழப்போவதில்லை. தெளிந்த இலக்கும், கடுமையான உழைப்பும், ஜனநாயக அமைப்பும், உழைக்கும் மக்களைத் திரட்டிய ஒருமைப்பாடும் தேவை.

இந்தியாவில் இடதுசாரி இயக்கங்களின் முன் நிற்கும் பணிகளை எவ்வாறு புரிந்துகொள்வது? நம் மண்ணுக்கேற்ற மார்க்ஸியம் எது? இந்தியாவில் எது புரட்சிகர வர்க்கம்? சாதியம்~ பெண்ணடிமை என்ற இரும்புச் சட்டகத்துள் சிறைபட்டுக் கிடக்கும் இந்தியாவில், வர்க்கம் என்பதற்குப் பொருள் என்ன? தலித்துகளும், பழங்குடியினரும் மற்ற அடித்தட்டுச் சாதிகளும் புரட்சிகர வர்க்கமாக முடியுமா? மார்க்ஸ், ''உலகத் தொழிலாளர்களே ஒன்றுபடுங்கள். உங்கள் விலங்குகளைத் தவிர, இழப்பதற்கு உங்களிடம் ஒன்றும் இல்லை'' என்று அறைகூவல் விடுத்தார். இன்று நம்மிடையே இழப்பதற்கு ஒன்றுமில்லாதவர்கள் யார்? அவர்கள்தான் புரட்சிப் படையாக முடியுமா?

ஆயிரம் கேள்விகளுக்கு இடையில் ஒன்று மட்டும் தெளிவு. முதலாளித்துவத்துக்கு மனித நேய முகமூடி மாட்டி, அதனையே தொடரலாம் என்பது பகல்கனவு ஏமாற்று வித்தை. முதலாளித்துவமும் மனிதமும் முரண்பட்டவை. முதலாளித்துவம் முடிக்கப்பட வேண்டும் உடைக்கப்பட வேண்டும் புதைக்கப்பட வேண்டும். சோஷலிஸம் ஒன்றுதான் மனித சமுதாயத்தின் விடுதலைக்கு, மகோன்னத வளர்ச்சிக்குமான மார்க்கம். ஆனால், அது இருபதாம் நூற்றாண்டின் சோஷலிஸமாக இருக்க முடியாது. ஒரு புனர்ஜன்மம் எடுத்த சோஷலிஸத்தினால்தான் அது இயலும். இருபதாம் நூற்றாண்டின் இமாலயத் தவறு களையும், மனித உரிமை மீறல்களையும், தவிர்த்த சோஷலிஸம்தான் இருபத்தியோராம் நூற்றாண்டின் வளர்ச்சிக்கும், நீதிக்கும், மானுட விடுதலைக்கும் சித்தாந்தத் தளமாக முடியும்!

**—வசந்திதேவி**

**(2016, நவம்பர் 7 அன்று, மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி சென்னையில் நடத்திய ரஷ்யப் புரட்சியின் நூற்றாண்டுத் தொடக்க விழாவில் நிகழ்த்திய உரையின் சுருக்கம்.)**

**நன்றி: தி இந்து**

# மகிந்த மீதான ஆத்திரத்தின் வெளிப்பாடு!

இவ்வருட மேதினத்தின் போது முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச கலந்துகொண்ட காலிமுகத்திடல் மேதினக் கூட்டத்தில் திரண்ட மக்கள் திரளால் மகிந்த பெரும் இடர்ப்பாட்டை எதிர்கொண்டுள்ளார்.


இந்த மேதினக் கூட்டத்தில் அலைகடலெனத் திரண்ட மக்கள் கூட்டத்தைக் கண்டு அஞ்சிய 'நல்லாட்சி' அரசு, மகிந்தவுக்கான பாதுகாப்பைத் திடீரென் குறைத்துக் கொண்டுள்ளது.

முன்னாள் ஜனாதிபதி என்ற வகையில் அவருக்கு வழங்கப்பட்டிருந்த பாதுகாப்பு கடமையில் ஈடுபட்டிருந்த உதவி பொலிஸ் அத்தியட்சகர் (சுப்பிரிண்டன்) உட்பட 42 பொலிசார் அவரது பாதுகாப்புச் சேவையில் இருந்து திடீரென நீக்கப்பட்டுள்ளனர்.

இதுபற்றிக் கருத்துத் தெரிவித்த மகிந்த, புலிகளை அழித்ததின் காரணமாக இன்னமும் செயற்பட்டுக் கொண்டிருக்கின்ற அவர்களது மிச்சசொச்சங்களால் தனது உயிருக்குத் தொடர்ந்தும் ஆபத்து இருக்கின்ற ஒரு சூழலில் தனது பாதுகாப்பைக் குறைப்பது தனது உயிருக்கு ஆபத்தை ஏற்படுத்தும் ஒரு நடவடிக்கையாகும். இம்முறை மேதினத்தின் போது தனது கூட்டத்தில் பங்குபற்றிய மக்கள் வெள்ளத்தைக் கண்டு அச்சமடைந்த ஆட்சியாளர்கள் தனது நடமாட்டத்தைக் கட்டுப்படுத்தவே தனது பாதுகாப்பைக் குறைத்துள்ளனர் எனக் குறிப்பிட்டுள்ளார்.

இதற்கு முன்னரும் மகிந்தவின் பாதுகாப்பை 'நல்லாட்சி' அரசாங்கம் படிப்படியாகக் குறைத்து வந்துள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

# மார்க்சிய அறிஞர் மறைவு



மக்கள் மத்தியில் மிகவும் பிரபலமான மார்க்சிய அறிஞரும், சென்னையில் பல்லாயிரக்கணக்கான நூல்களைக் கொண்டு, ''மார்க்ஸ் நூலகம்'' என்ற பெயரில் எல்லோருக்கும் பயன்படும் வகையில் நூலகம் ஒன்றை நிறுவி செயல்பட்டவரும், 'மார்க்சிய மெய்ஞானம்' என்ற நூல் உட்பட பல நூல்களை எழுதியதுடன் மொழிபெயர்ப்புகளையும் செய்தவருமான தோழர் எஸ்.எஸ்.கண்ணன் அவர்கள், 2017 ஏப்ரல் 23 ஆம் திகதி தமது 95 ஆவது வயதில் சென்னையில் காலமானார் என்பதை வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கிறோம்.

அவரது மறைவால் துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினர் மற்றும் தோழர்களுக்கு 'வானவில்' தனது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவிப்பதுடன், தோழர் கண்ணனுக்கு தனது அஞ்சலியையும் தெரிவித்துக் கொள்கிறது.

*— **ஆசிரியர் குழு, 'வானவில்'***

**முன்பக்கத் தொடர்ச்சி...**

மக்களின் நிலைமை வேறொரு வடிவத்தை எடுத்தது. தென்னிலங்கையைப் பொறுத்த வரை, வட கிழக்கின் பாரம்பரியமான இனப் பிரச்சினைக்கான போராட்டம் போலன்றி, எப்பொழுதும் ஏகாதிபத்திய எதிர்ப்புப் போராட்டங்களிலும், மக்கள் நலப் போராட்டங்களிலும், வர்க்கப் போராட்டங்களிலும் ஈடுபட்டு வந்த அந்த மக்கள் திரும்பவும் அந்த வழியிலேயே பயணிக்க ஆரம்பித்தனர்.

நாட்டின் வளங்களை அந்நியருக்குத் தாரைவார்ப்பதற்கு எதிரான போராட்டம், கல்வி மற்றும் மருத்துவத்துறையை தனியார்மயப்படுத்துவதற்கெதிரான போராட்டம், ஊழலுக்கெதிரான போராட்டம், மத்திய வங்கியில் நடந்த பல கோடி ரூபா பண மோசடிக்கு எதிரான போராட்டம், விலைவாசி உயர்வுக்கெதிரான போராட்டம், சம்பளவுயர்வுக்கான போராட்டம், வேலையில்லாத் திண்டாட்டத்துக்கு எதிரான போராட்டம், என பலதரப்பட்ட போராட்டங்கள் தென்னிலங்கையில் வெடித்துக் கிளம்பித் தொடர்ந்த வண்ணம் உள்ளன.

மறுபுறத்தில், இன்றைய அரசாங்கம் பதவிக்கு வந்த பின்னர் முன்னைய அரசாங்கத்தால் ஆரம்பிக்கப்பட்ட அநேகமான அபிவிருத்தித் திட்டங்கள் யாவும் நிறுத்தப்பட்டுவிட்டன. முன்னைய அரசுதான் நாட்டைக் கடனாளியாக்கியது என்று சொல்லிக்கொண்டே தற்போதைய அரசு மேலும் மேலும் வெளிநாடுகளிடம் கடன் வாங்கி நாட்டை நிரந்தரக் கடனாளியாக்குவதுடன், நாட்டின் வளங்களையும் அந்நிய நாடுகளுக்குத் தாரை வார்க்கும் கைங்கரியத்திலும் ஈடுபட்டு வருகின்றது.

பொதுவாக, இன்றைய அரசு நாட்டின் இரண்டு பிரதான கட்சிகளையும் கொண்ட, உலகுக்கே முன்மாதிரியான தேசிய அரசு என்று தன்னைத்தானே புளுகிக் கொண்டாலும், தமிழ் மக்கள் உட்பட நாட்டு மக்கள் அனைவரும் இந்த அரசின் மீது நம்பிக்கை இழந்து வெறுக்கும் நிலையே தோன்றியுள்ளது.

இதன் காரணமாகவே தனது தோல்வியை மறைப்பதற்காக அரசாங்கம் உள்ளூராட்சித் தேர்தல்களை உரிய காலத்தில் நடத்தாது இரண்டரை ஆண்டுகளாக இழுத்தடித்து வருகின்றது. உள்ளூராட்சித் தேர்களை நடத்தாது அரசு இழுத்தடித்தாலும், தென்னிலங்கையில் ஜனாதிபதி மைத்திரியின் சொந்த இடமான பொலநறுவ உட்பட சில பகுதிகளில் நடந்த கூட்டுறவுச் சங்கத் தேர்தல்களில் அரசின் பங்காளிக் கட்சிகள் இரண்டும் கூட்டு எதிரணியிடம் மண் கவ்வியுள்ளன. அதுதவிர, இவ்வருட மேதினத்தின் போது காலிமுகத்திடலில் எதிரணி நடாத்திய மேதினப் பேரணியில் திரண்ட இலட்சக்கணக்கான மக்கள் வெள்ளத்தைக் கண்டு நல்லாட்சி அரசு அதிர்ச்சியில் உறைந்து போயுள்ளது.

இந்த நிலைமைகள் காரணமாக பொதுவாக எல்லா முதலாளித்துவ ஆட்சியாளர்களுக்கும் உருவாகும் விபரீதமான எண்ணம் போல மைத்திரி – ரணில் அரசுக்கும் ஒரு விபரீத எண்ணம் உருவாகியுள்ளது. அதாவது, உண்மையான அதிகாரமான முதலாளித்துவ சர்வாதிகாரம் என்னும் மூலஸ்தானத்தை மறைத்து நிற்கும் பாராளுமன்ற ஜனநாயகம் என்ற போலி ஜனநாயகத் திரையைக் கிழித்தெறிந்துவிட்டு, அப்பட்டமான இராணுவ சர்வாதிகாரத்தை நிலைநிறுததுவதற்கு அரசு முற்படுகிறது.

இதனை முதலில் வெளிப்படுத்தியவர் எப்பொழுதும் வெளிப்படையாகவும், தான்தோன்றித்தனமாகவும் பேசும் அமைச்சரவைப் பேச்சாளரான சுகாதார அமைச்சர் ராஜித சேனரத்ன. வாராந்த அமைச்சரவைக் கூட்ட முடிவுகளை ஊடகவியலாளர்களுக்கு வெளியிட்ட அவர், “நாட்டில் சட்டம் ஒழுங்கு சீர்குலைந்துள்ளதால், இரண்டு வருட காலத்துக்கு முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகவிடம் அதிகாரத்தைக் கொடுத்து, அவர் விசேட படையணி ஒன்றின் மூலம் நாட்டில் சட்டம் ஒழுங்கைப் பேணுவதற்கு ஜனாதிபதி தீர்மானித்துள்ளார்” என்ற குண்டொன்றை அவர் தூக்கிப் போட்டார். உடனடியகவே சரத் பொன்சேகவிடமிருந்து அதற்குச் சாதகமான கருத்தும் வெளியிடப்பட்டது. அவர் தான் இப்பொழுது வகிக்கும் அமைச்சுப் பதவியைத் துறந்துவிட்டு புதிய பொறுப்பை ஏற்கத் தயார் என அறிவித்தார். இலங்கையின் உள்நாட்டுப் போரில் திளைத்த அவருக்கு, ‘கரும்பு தின்ன கைக்கூலியா வேண்டும்?’.

உடனடியாகவே அவரது கூற்றுக்கு எதிர்வினைகள் ஆற்றப்பட்டன. அரசாங்க தரப்பைச் சேர்ந்த சில அமைச்சர்கள் ஜனாதிபதி அப்படியொரு தீர்மானத்தை எடுக்கவில்லை எனவும், ராஜித சேனரத்ன சொல்வது அவரது சொந்தக் கற்பனை எனவும் அவர்கள் எகிறிக் குதித்து மறுத்தார்கள். இது சம்பந்தமாக கூட்டு எதிரணியும், சில மனித உரிமை அமைப்புகளும் தமது கண்டனத்தை வெளிப்படுத்தின. (வழக்கம் போல உத்தியோகபூர்வ எதிர்க்கட்சியான தமிழ் தேசிய கூட்டமைப்பும், சோசலிசத்தின் பாதுகாவலர்களான ஜே.வி.பியும் இந்த தேசிய அபாயம் குறித்து மௌனமாக இருந்து கொண்டன) அதைத் தொடர்ந்து அப்படியான தீர்மானம் எதுவும் எடுக்கப்படவில்லை என பிரதமர் ரணில் விக்கிரமசிங்க மறுப்பறிக்கை ஒன்றை வெளியிட்டார்.

ஆனால் பிரதமரால் அவசரமாக இந்த இராணுவ ஆட்சியை நோக்கிய நகர்வு மறுக்கப்பட்டாலும், ஜனாதிபதி மைத்திரி இந்தக் கூற்றிலுள்ள சரி பிழையைப் பற்றி இன்றுவரை வாய் திறக்காமல் இருக்கிறார். அவரது மௌனம் ‘நெருப்பில்லாமல் புகையாது’ என்ற சொற்றொடரைத்தான் ஞாபகப்படுத்துகிறது.

நல்லாட்சி என்று சொல்லிக் கொண்டு ஆட்சிபீடமேறியவர்கள், ஆட்சியைக் கொண்டு நடாத்த வக்கில்லாத நிலைமையில், இராணுவ அதிகாரத்தின் மூலம் ஆட்சியை நடாத்தவும், அதைத் தக்க வைத்துக் கொள்ளவும் முற்படுவதையே இது எடுத்துக் காட்டுகிறது.

அதற்காக அவர்கள் தேர்ந்தெடுத்த நபர் யார் என்பது அடுத்த

கேள்வியாகும். இலங்கையின் உள்நாட்டுப் போரில் ஒரு குறிப்பிட்ட காலம் இராணுவத் தளபதியாக இருந்து போர்க் குற்றச்சாட்டுகளுக்கும், உரிமை மீறல்களுக்கும் காரணகர்த்தா எனக் குற்றம்சாட்டப்பட்ட ஒருவரை அரசாங்கம் தெரிவு செய்ததின் மூலம், போர்க் குற்ற மீறல்கள் குறித்து அரசாங்கம் பொறுப்புக் கூறல் சம்பந்தமாக சர்வதேச சமூகத்துக்கும், நாட்டு மக்களுக்கும் வழங்கிய வாக்குறுதிகளைக் கேலிக்கூத்தாக்கியுள்ளது.

அதுமட்டுமல்ல, இந்த பொன்சேகதான், இராணுவத் தளபதியாக இருந்த காலத்தில் வெளிநாட்டு ஊடகம் ஒன்றுக்கு வழங்கிய பேட்டியில், "இலங்கையில் தமிழர்கள் வேணடுமானால் இருந்துவிட்டுப் போகட்டும். ஆனால் உரிமை கிரிமை என எதையும் கோரக்கூடாது" என பச்சை இனவெறியைக் கக்கியவர்.

அதுமாத்திரமன்று, 2010 ஜனாதிபதித் தேர்தலின் போது புலிகளுடனான போரின் வெற்றி நாயகன் தானே என மார்தட்டிக் கொண்டு, உள்நாட்டு வெளிநாட்டு பிற்போக்கு சக்திகளின் ஆதரவுடன் ஏகாதிபத்திய எதிர்ப்பு வேட்பாளரான மகிந்த ராஜபக்சவைத் தோற்கடிக்க களம் இறங்கியவர்.

ஆனால் அரசாங்கம் இப்பொழுது தனது திட்டத்தில் இருந்து பின்வாங்கியுள்ளதாக ஒரு வேடத்தைப் புனைந்துள்ளது.

அரசாங்கம் பொதுமக்களின் எதிர்ப்புக்கு அஞ்சி தனது இராணுவ ஆட்சிக்கான கனவைத் தற்காலிகமாக நிறுத்தி வைத்தாலும், அந்த அபாயம் நீங்கிவிட்டது என்று சொல்லிவிட முடியாது. நாட்டில் அரசுக்கு எதிரான போக்கு மேலும் மேலும் அதிகரித்து வருவதால், ஏதோ ஒரு கட்டத்தில் இந்த 'நல்லாட்சி' அரசாங்கம் இராணுவ ஆட்சியை நோக்கிக் காலடி எடுத்து வைக்கும் நாசகார அரசாக மாறப்போவது உறுதி.

எனவே ஜனநாயகத்தையும் நாட்டையும் நேசிக்கின்ற முற்போக்கு, ஜனநாயக, தேசபக்த சக்திகள் நாட்டில் பிற்போக்கு வலதுசாரி சக்திகளால் உருவாக்கப்படப் போகின்ற எதேச்சாதிகார அரசியல் போக்கிற்கு எதிராக மிகவும் விழிப்புடன் இருந்து செயல்படுவது அவசியம்.

## இலண்டனில் கூட்டமைப்பு பற்றி மனோ கணேசன் அவிழ்த்துக் கொட்டிய உண்மைகள்!

**இ**லண்டனில் அங்குள்ள தமிழரசுக் கட்சியின் கிளை ஏற்பாடு செய்திருந்த 'தந்தை செல்வா' நினைவுதினக் கூட்டத்தில் பங்கேற்றுப் பேசிய ஜனநாயக மக்கள் முன்னணியின் தலைவரும், அமைச்சருமான மனோ கணேசன், தமிழ் தேசியக் கூட்டமைப்பு சம்பந்தமாக முக்கியமான சில விடயங்களைப் புட்டு வைத்திருக்கிறார்.

அந்நிகழ்வில் பேசிய மனோ கணேசன், ''இலங்கை அரசாங்கம் வடக்கு கிழக்கை ஒருபோதும் இணைக்கப் போவதில்லை, தமிழ் மக்களுக்கு சமஸ்டி அரசமைப்பை ஒருபோதும் வழங்கப் போவதில்லை, புதிய அரசியல் அமைப்பை நடைமுறைப்படுத்தப் போவதில்லை, இவையெல்லாம் தமிழ் தேசியக் கூட்டமைப்புக்குத் தெரிந்திருந்தும் கூட்டமைப்பினர் அதை மக்களுக்குச் சொல்லாமல் மறைக்கின்றனர்'' என மாபெரும் உண்மை ஒன்றைக் கக்கியிருக்கின்றார்.

அதுமாத்திரமின்றி, தானும் புதிய அரசியல் சாசனம் தயாரிக்கும் வழிநடத்தல் குழுவில் இருப்பதால், புதிய அரசியல் அமைப்பில் இனப் பிரச்சினைக்காக முன்மொழியப்படும் தீர்வு என்ன என்பது தெியும். அதன்படி, இனப் பிரச்சினைக்கு முன் வைக்கப்படப்போகும் தீர்வு இந்திய - இலங்கை ஒப்பந்தத்தின் கீழ் உருவாக்கப்பட்ட மாகாண சபைகளுக்குக் குறைவாகவே இருக்கப்போகின்றது என்றும் கூறியுள்ளார்.

மனோ கணேசன் காலத்துக் காலம் பல்வேறு பெயர்களில் அரசியல் கட்சிகளை நடாத்தினாலும், அடிப்படையில் அவர் ஒரு ஐக்கிய தேசியக் கட்சிக்காரர். கொழும்புத் தமிழ் மக்களின் வாக்குகளை நேரடியாக ஐ.தே.கவுக்குப் பெற்றுக் கொடுத்து வந்த அவர், அது சாத்தியப்படாமல் போனபோது, தனியான கட்சி தொடங்கி கனகச்சிதமாக அந்த வேலையைச் செய்து வருகின்றார். மறந்தும் ஒருபோதும் அவர் சிறீலங்கா சுதந்திரக் கட்சியுடனோ அல்லது இடதுசாரிகளுடனோ கூட்டு வைக்கக் கூடியவரல்ல. ஆனாலும் தமிழ் தேசியக் கூட்டமைப்பினரைப் போல இரட்டை வேடம் போடாமல் தனது ஐ.தே.க. சார்பை பகிரங்கமாக வெளிப்படுத்துபவர்.

ஐ.தே.க. தலைவர் ரணிலுக்கு மிகவும் வேண்டியவரான மனோ கணேசன் லண்டன் கூட்டத்தில் தெரிவித்த கருத்துக்கள் சாதாரணமானவையல்ல. அவ்வளவும் அப்பட்டமான உண்மை. அரசாங்க அமைச்சராக இருந்து கொண்டு அவர் துணிச்சலுடன் இந்த உண்மையைப் பகிரங்கப்படுத்தியதற்காக நாம் அவருக்கு நன்றி சொல்ல வேண்டும்.

இனியாவது தமிழ் தேசியக் கூட்டமைப்பின் மும்மூர்த்திகளான சம்பந்தன், சுமந்திரன், மாவை சேனாதிராசா ஆகியோர், இந்த அரசாங்கம் புதிய அரசியல் அமைப்பின் மூலம் தமிழ் மக்களின் சகல பிரச்சினைகளையும் தீர்த்து வைக்கப் போகின்றது எனச் செய்யும் பொய் புரட்டுக் கதைகளைத் தமிழ் மக்கள் நம்பப் போகிறார்களா அல்லது அந்த மும்மூர்த்திகள் கூட்டமைப்பை ஐ.தே.க. அரசின் வாலாக மாற்றி வைத்திருப்பதை உணர்ந்து கொள்ளப் போகிறார்களா என்பதைப் பார்ப்போம்.

---

7ம் பக்கத்தொடர்ச்சி...

வாசிப்பும், அது பற்றிய கலந்துரையாடலும் பிரான்ஸ் தலைநகர் பாரீசில் 2017 ஏப்ரல் 23 ஆம் திகதி நடைபெற்றது. 26ஆவது வாசிப்பு மனநிலை விவாதம் என்ற அரங்கின் கீழேயே இந்நிகழ்வு நடைபெற்றது.

எழுத்தாளர் வி.ரி.இளங்கோவன் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில், இரயாகரன், எம்.ஆர்.ஸ்டாலின், வரதன், தேவதாசன், சோபாசக்தி, அசுரா ஆகியோர் கலந்துகொண்டு நூல் பற்றிய தமது மதிப்பீடுகளை வழங்கினர்.

இந்நூலின் வெளியீட்டு விழாக்கள் விமர்சனக் கூட்டங்கள், மற்றும் கலந்துரையாடல்கள் ஏற்கெனவே இலங்கையில் கிளிநொச்சி, யாழ்ப்பாணம் ஆகிய இடங்களிலும், கனடாவின் ரொறன்ரோ நகரிலும், பிரித்தானியாவின் இலண்டன் நகரிலும் நடைபெற்றுள்ளன என்பது குறிப்பிடத்தக்கது.

# அரசாங்கத்துக்கு வால் பிடிப்பதற்கு மாவையின் கண்டுபிடிப்பு!



“இந்த அரசாங்கத்தை நெருக்கடிக்குள்ளாக்கினால் தமிழ் மக்களுக்கு அநீதி இழைத்தவர்கள் மீண்டும் பதவிக்கு வந்துவிடுவார்கள். அதுதான் எங்களுக்கு இப்போது இருக்கின்ற ஒரு சஞ்சலம்.

நாங்கள் அரசாங்கத்துக்கு ஆதரவாக வாக்களித்தவர்கள். மக்களின் பிரச்சினைகள் எல்லாவற்றுக்கும் தீர்வுகாண வேண்டும் என்பதற்காகவே அரசாங்கத்துக்கு வாக்களித்தோம். ஆனால், அந்த விடயங்கள் எவையும் நடைபெறவில்லை”

இவ்வாறு கூறியிருக்கிறார் போலி எதிர்க்கட்சியின் உறுப்பினர்களில் ஒருவரும், தமிழரசுக் கட்சியின் தலைவருமான மாவை சேனாதிராசா. கிளிநொச்சி கந்தசுவாமி கோயில் முன்றலில் காணாமல் போனவர்களின் உறவினர்கள் இரண்டு மாதங்களுக்கும் மேலாக நடாத்தி வரும் கவனயீர்ப்புப் போராடட்டத்தைப் பார்வையிடச் சென்றபோதே மாவை சேனாதிராசா இவ்வாறு திருவாய் மலர்ந்திருக்கிறார்.

உலகில் எங்குமே இல்லாத புதுமையாக எதிர்க்கட்சிப் பதவியையும் வைத்துக்கொண்டு அதேநேரத்தில் அரசின் பங்காளிகளாகவும் செயல்படும் தமிழ் தேசியக் கூட்டமைப்பினர், அரசாங்கத்துக்கு வால்பிடிக்கும் தமது இழிசெயலுக்கு நாக்கூசாமல் மக்கள் மத்தியில் வந்து இப்படிப் பொய் கூறித் திரிகின்றனர். அவர்களது இந்தப் போக்கு மக்களுக்குச் செய்யும் துரோகம் மட்டுமல்ல, தாம் என்ன செய்தாலும் தமிழ் மக்கள் மந்தைக் கூட்டம் போலத் தலையசைப்பார்கள் என்ற செருக்குப் போக்குமாகும்.

சிறீலங்கா சுதந்திரக் கட்சி தலைமையிலான அரசுகள் பதவியில் இருக்கும் போது அந்த அரசுகள் தமிழர் விரோத அரசுகள் என்று போராட்டங்கள் நடாத்துவதும், தங்களது வரலாறு முழுவதும் தமிழ் மக்களுக்கு எதிராக இன வன்செயல்களையும் அழிவுகளையும் ஏற்படுத்தி வந்த ஐக்கிய தேசியக் கட்சி ஆட்சியில் இருக்கின்ற நேரங்களில் அந்த அரசுடன் கொஞ்சிக் குலாவுவதும் அன்றைய தமிழ் தலைமைகள் முதல் இன்றைய தமிழ் தேசியக் கூட்டமைப்பு வரை ஒரு தொடர்கதையாகவே இருந்து வருகின்றது.

இப்படிப் பகிரங்கமாக எவ்வித தயக்கமும் இன்றி தமிழ் தலைமைகள் தொடர்ச்சியாக நடந்து வருவதற்குக் காரணம், அவர்களுக்கும் ஐ.தே.கவுக்கும் இடையிலான வர்க்க மற்றும் அரசியல் ஒருமைப்பாடும் உறவும் இருப்பது மட்டுமின்றி, தமிழ் மக்கள் வரலாற்றிலிருந்து எவ்வித பாடங்களையும் கற்காமலும், சூடு சொரணையின்றியும் இருப்பதும் காரணமாகும்.

இந்த விடயத்தில் தமிழ் மக்கள் தமது கடந்த காலத் தவறை உணர்ந்து, தமது பாதையை மாற்றியமைக்காதவரை, தமிழ் தேசியக் கூட்டமைப்பு போன்ற மோசடி கட்சிகள் தொடர்ந்து இப்படியான ஏமாற்று அரசியலைத் தொடர்வதைத் தடுத்து நிறுத்த முடியாது என்பதே நிலைமையாக இருக்கப் போகின்றது.

**புனிதன்**

# “நாட்டில் இளைஞர் புரட்சி அல்லது இராணுவப் புரட்சி ஏற்படும்!”

## அரசை எச்சரிக்கிறார் டியு குணசேகர

“இலங்கையின் தற்போதைய கூட்டரசாங்கம் இப்படியே பயணித்துக் கொண்டிருந்தால், நாட்டில் இளைஞர்களின் புரட்சி அல்லது இராணுவச் சதிப் புரட்சி ஏற்படும்” என இலங்கை கம்யூனிஸ்ட் கட்சியின் பொதுச் செயலாளர் டியு குணசேகர அரசுக்கு எச்சரிக்கை விடுத்திருக்கிறார். இது சம்பந்தமாக அவர் மேலும் கூறுகையில்,

“மகிந்தவின் ஆட்சியைக் கவிழ்த்து நல்லாட்சி என்று சொல்லப்படும் இந்த கூட்டரசு உருவானது. மகிந்தவின் ஆட்சியில் காணப்பட்ட சில குறைபாடுகளுக்கு இந்த அரசு தீர்வுகாணும் என மக்கள் எதிர்பார்த்தனர்.

ஆட்சிபீடம் ஏறி இரண்டரை வருடங்கள் ஆகின்றன. ஆனால் எதுவும் நடக்கவில்லை. இருக்கின்ற நிலைமை மோசமாகின்றதே தவிர, நல்ல விடயங்கள் எதுவுமே நடக்கவில்லை. வாழ்க்கைச் செலவீனம் குறையும் என்று மக்கள் எதிர்பார்த்தார்கள். அதற்கு மாறாக வாழ்க்கைச் செலவீனம் அதிகரித்துக் கொண்டே செல்கிறது. வெளிநாட்டு முதலீடுகள் எவையும் நாட்டுக்குள் வரவில்லை. அரச தலைவரும் தலைமை அமைச்சரும் எல்லா நாடுகளுக்கும் சென்று வருகின்றனர். ஆனால் ஒரு முதலீட்டாளர் தன்னும் நாட்டுக்குள் வரவில்லை.

வெளிநாடுகள் நட்பாக உள்ளதாக இந்த அரச கூறிக் கொள்கிறது. ஆனால், அந்த நாடுகள் எவையும் பொருளாதார ரீதியில் இலங்கைக்கு உதவுவதாக இல்லை.

மறுபுறம், போர்க்குற்ற விசாரணையில் வெளிநாட்டுத் தலையீடு ஏற்படும் அபாயம் ஏற்பட்டுள்ளது. பொருளாதார ரீதியில் இலங்கைக்கு உதவுவதற்கு இந்த விவகாரத்தை அந்த நாடுகள் பயன்படுத்துகின்றனவா என்ற சந்தேகம் எழுந்துள்ளது.

மொத்தத்தில் எல்லா விடயங்களும் சிக்கலாகவே உள்ளன. இந்த அரசு ஆட்சியைக் கைப்பற்றி இரண்டரை வருடங்கள் ஆகின்றன. கடந்து சென்றதைப் போன்று அரைவாசிக் காலம்தான் தேர்தலுக்கு இருக்கின்றது. இப்படியே எதுவித சாதகமான மாற்றமுமின்றி நாடு சென்றால் நாட்டில் பெரும் பிரச்சினைகள் ஏற்பட்டுவிடும். இளைஞர் புரட்சியோ அல்லது இராணுவப் புரட்சியோ ஏறபட்டுவிடும்.”

இவ்வாறு கூறியிருக்கிறார் டியு குணசேகர.